Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNOTTAM

வெளியீடு - 18 | 25 செப்டெம்பர் 2001 | விலை:- 10.00

வல்லமைமிக்க மனிதன் இந்த புவிக்கோளை அளவுக்கதிகமாக சூறையாடிவிட்டான். எதிர்காலம் மனிதனின் நன்நடத்தையில் மாத்திரமே தங்கியிருக்கிறது.

# எரிகிற வீட்டில் பிடுங்குகிறவர்கள் அல்ல!

# பொறுப்பு வாய்ந்த தலைமைத்துவம் தேவை

உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் ஏற்பட்டுள்ள பாரதூரமான நெருக்கடிகளுக்கு மத்தியில் இலங்கை அல்லாடிப் போயுள்ளது. இந்தச் சூழ்நிலையில் இலக்கற்ற பயணத்தைத் தவிர்த்து இந்த நாடு நேர்வழியில் செல்வதற்கான நிலைமைகள் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

அதிதீவிரவாதம் இக்காலத்திற்குப் பொருந்தாத நிலைப்பாட்டை எடுத்துள்ள தீவிரவாத சக்திகளைத் தவிர சமூகத்தின் மற்றைய சகல பிரிவினருமே இந்த நாட்டில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் சமாதானம் ஏற்பட வேண்டும் என்றே அவாவுறுகின்றனர்.

ஆனால் அந்த மக்களின் குரலை அடைப்பதற்கு இனவாத சக்திகள் முயலுகின்றன. பல்வேறுவிதமான அச்சுறுத்தல்களை விடுக்கின்றன.

ஆனால் அரசியல் அரங்கு மோசமான சந்தர்ப்பவாதம் நிறைந்ததாகவே இருக்கின்றது. நேற்று வரை ஐ.தே.க யுடன் கூடிக்குலவி பாராளுமன்றம் இடைநிறுத்தப்பட்டதால் ஜனநாயகம் பறிபோய் விட்டது என்று தமிழ் மக்களின் பிரச்சினைகளை மறந்து கூப்பாடு போட்டுத் திரிந்த தமிழ் கட்சிகள்


விமல் வீரவன்ச


சில இன்று என்ன கோரிக்கை வைப்பதென்று தெரியாமல் உளறிக் கொட்டுகிறார்கள்.

தமிழ் மக்களின் நலன்கள், அபிலாஷைகள் தொடர்பாக தெளிவான நிலைப்பாடுகளோ, கொள்கைகளோ அற்ற இந்தக் கட்சிகள் அன்றன்றாடு எதையாவது பேசி தமது காலத்தை ஓட்டி வந்தன. தமக்குப் பாதுகாப்பான, வசதியான அரசியலாக புலிகளின் நிலைப்பாட்டை தமது நிலைப்பாடாக பாசாங்கு செய்பவர்கள் இந்தமாதிரி நடந்துக் கொள்வதன் மூலம் உயிர் பாதுகாப்பும் தற்போதைய சௌகரியமான வாழ்வும் உறுதி செய்யப்படும் எனக் கருதியே செயற்படுகிறார்கள். ஆனால் இங்கு தமிழ் மக்களுக்கோ அல்லது வேறு பொது நியாயங்களுக்கோ விசுவாசமான எந்த நிலைப்பாடும் இல்லை.



அதனால்தான் நேற்று ஒன்றும் இன்று ஒன்றும் என மாற்றி மாற்றி பேசுகிறார்கள். இதுபற்றி தமிழ் பத்திரிகைகளும் அக்கறைப்பட்டது கிடையாது.

அரசியல் யாப்பை மாற்ற வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்ட போது ஜனநாயகம், சுதந்திர ஆணைக்குழுக்கள் வேண்டுமென்று பேசினார்கள். அரசியலமைப்பை மாற்றுவது இப்போது அவசியமில்லை என்றார்கள்.


ரணில்

அரசு- ஜே.வி.பி உடன்பாட்டுக்குச் சென்று அரசு தப்பிப் பிழைக்கும் என்ற நிலை உருவாகியபோது ஐந்து ஆணைக்குழுக்களுக்கு முன்னர் இனப்பிரச்சினை விடயம் முதனிலைப்படுத்தப்பட வேண்டும் என்கிறார்கள்.

2000ம் ஆண்டு ஆகஸ்ட் இல் அரசின் தீர்வு திட்ட யோசனைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது சிங்கள இனவாதிகள்



ஆனந்தசங்கரி

எடுத்த அதே எதிர்ப்பு நிலைப்பாட்டையே பாராளுமன்றத்தில் இவர்கள் எடுத்தார்கள்.

ஐரோப்பாவிற்கும் வட அமெரிக்காவிற்கும் புலம் பெயர்ந்த தமிழ்களுடைய நிலவரம் வேறு.

தொடர்ச்சி 02 ம் பக்கம்

## புதியதொரு உலக ஒழுங்கு வேண்டும்



அமெரிக்க சர்வதேச வர்த்தக மத்திய நிலையத்தில் பயங்கரவாத தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு கண்ணோட்டம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

அதேவேளை 2ம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உலகின் பல்வேறு நாடுகளிலும் வன்முறையின் மீது அபிமானம் கொண்ட மனநோயாளி அரசுகளாலும், பயங்கரவாதக் குழுக்களாலும் மக்கள் இலட்சக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்தும் அது பாரியளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமது உள்ளூர் அதிகாரங்களுக்காகவும், உலகின் மீது தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்று சிந்திக்கும் தம்மைத் தவிர மற்றவர்களெல்லாம் கிள்ளுகீரைகளென நினைக்கும் அகங்காரங்களும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டிய காலம் வந்து விட்டது.

கபடத்தனமான உலகக் கிராமம் என்ற கருத்துக்குப் பதிலாக இனங்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் ஜனநாயக நாடுகளின் இறைமையை அங்கீகரிக்கும் மனித உரிமைகள் ஜனநாயகத்தை மதிக்கும் புதியதொரு அரசியல் கலாச்சாரம் உலகளாவிய அளவில் ஏற்படுத்தப்பட வேண்டும்.


வறிய நாடுகளைக் கடனாளியாக்கி அடிமைப்படுத்தும் முறை முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

பின்லேடனின் பயங்கரவாதத்தைப் போலவே இஸ்ரேலின் பயங்கரவாதமும் ஒரே தராசில் வைத்து எண்ணப்பட வேண்டும்.

மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய உலக கலாச்சாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இல்லையேல் இன்று பெருகியுள்ள நவீன பயங்கரமான ஆயுதங்கள் உலகில் மனித இருப்பை கேள்விக்குறியாக்கிவிடும்.

## இரங்கல்



தமிழ்நாடு மாநில காங்கிரஸ் தலைவரும் காந்தீயவாதியுமான திரு **ஜி.கே. மூப்பனார்** அவர்களின் மறைவிற்கு கண்ணோட்டம் தனது இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.நிலப்பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும் ஒரு காந்தீயவாதியாக எளிமையான வாழ்வை தனது வழிகாட்டி காமராஜரின் வழியில் பின்பற்றினார். சுதந்திரத்திற்குப் பின்னான இந்திய அரசியலிலும், தமிழக அரசியலிலும் அவர் மூன்று தசாப்தங்களாக பெருமதியான பங்களிப்பை வழங்கியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்



## வாழு வாழவிடு

அரச பயங்கரவாதம், குழுக்களின் பயங்கரவாதம், வெகுஜனங்களின் புரட்சிகர எழுச்சிகள் இவைகளுக்கிடையே தெளிவான எல்லைக் கோடுகள் வரைய வேண்டிய காலம் வந்துவிட்டது என்றே கருத வேண்டியிருக்கிறது.

மக்களின் பெயரால் நடைபெறும் மனிதகுலத்திற்கு விரோதமான குழுக்களின் நடவடிக்கைகள் சுதந்திரத்திற்கான, சமத்துவத்திற்கான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடும் மக்களியக்கங்களைச் சிறுமைப்படுத்துவனவாக அமைந்து விட்டன. இந்தக் குழுக்களின் பயங்கரவாதம், அரச பயங்கரவாதம் தன்னை நியாயப்படுத்துவதற்கு களம் அமைத்துக் கொடுப்பவையாக அமைந்து விட்டன. சில சந்தர்ப்பங்களில் அவை அரச பயங்கரவாதத்திற்கு ஒருபடி மேலாக மக்களுளக்கெதிரான குற்றமிழைப்பவையாக மாறியுள்ளன.

அமெரிக்கா உலகில் பயங்கரவாத குழுக்களை ஊக்குவிப்பதிலும், ஜனநாயகவிரோத அரசுகளைப் பாதுகாப்பதிலும் வகித்த பாத்திரத்தை யாரும் மறுத்துவிட முடியாது. அதற்காக உலக வர்த்தக மையத்தின் மீது நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை யாரும் நியாயப்படுத்துவார்களானால் அவர்களை மனித குலத்தின் விரோதிகளாகவே கருத முடியும். இங்கு 50 ஆயிரம் மக்கள் ஒரு சில கணங்களில் குரூரமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் இறுதியில் ஒன்றரை லட்சம் யப்பானிய மக்களை அணுகுண்டு வீசி ஒரு சில நிமிடங்களில் அழித்தது அமெரிக்கா. அதற்கு எந்த விதத்திலும் குறைந்ததில்லை பின்லேடன் என்ற மனித குல விரோதியின் குரூரப்பயங்கரவாதம்.

இத்தகையவர்களுக்கு அங்கீகாரம் வழங்குவதென்பது இவர்கள் சுதந்திரமாக செயற்பட அங்கீகரிப்பதென்பது புவிக்கோளில் வாழும் மக்களை பேரழிவின் விளிம்பில் வைப்பதற்குச் சமனாகும்.

லெபனானில் 1980களின் முற்பகுதியில் "சிற்றிலா", "சாப்ரா" அகதிமுகாம்களில் படுகொலைகளை முன்நின்று நடத்த இஸ்ரேலின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் இந்நாள் பிரதம மந்திரியுமான, ஏரியல் சறோன் போன்றவர்களின் கண்டனங்களை நாம் சாட்டை செய்யத் தேவையில்லை. அவர்களின் கண்டனங்களில் கேலிகளும், கிண்டல்களும் சேர்ந்துதான் இருக்கும்.

ஆனால் உலகின் தேச விடுதலை, நிறவெறிக்கெதிரான போராட்டங்கள், மனித உரிமை, ஜனநாயம் போன்றவற்றில் அக்கறையுள்ள இந்தியா, கியூபா, ரஷ்யா, மக்கள் சீனா, போன்ற நாடுகளும் மேற்கத்திய நாடுகளின் ஜனநாயகவாதிகளும், பி.எல்.ஓ வும் ஏகோபித்த முறையில் இந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ளன.

உலகின் நாகரீகமான பிரிவினர் அனைவரும், மனித குலத்தின் எதிர்கால நம்பிக்கையை சிதறியடிக்கும் இத் தாக்குதலுக்குப் பொறுப்பான பின்லேடன் போன்றவர்களை அனுமதிக்க முடியாது.

அதேவேளை தற்போதுள்ள புதிய உலக ஒழுங்கு உலகமயமாக்கல் என்பதை மனித குலத்தின் ஏற்றத்தாழ்வுகளை அப்படியே தக்கவைக்கும், சுரண்டலற்ற அடக்குமுறைகளின் உள்ளடக்கமாகக் கொண்ட அமைப்பு முறைக்குப் பதிலாக நாடுகளின் சுதந்திரத்தையும், இலங்கையின் தனித்துவத்தையும் சுரண்டலற்ற சுயாதீனமான ஐக்கியத்திற்கான கதவு உலகளாவியளவில் திறக்கப்பட வேண்டும். தற்போதைய சூழ்நிலைகளில் அத்தகைய புதிய சிந்தனைகளும் முளைவிட வேண்டும்.

அதேவேளை நாடுகளின் இராணுவ சர்வாதிகார ஆட்சிகளோ, பாசிச பயங்கரவாதக் குழுக்களோ அந்தந்த நாட்டின் இறைமையின் பெயரால் சகித்துக் கொள்ளப்படக்கூடாது.

தான் வாழுவதற்காக மற்றவர்கள் பலியாடுகள் என்ற சிந்தனை இன்றைய உலகிற்குப் பொருத்தமானதல்ல. இந்த பழையதோல் களையப்பட வேண்டும். வாழு வாழவிடு என்பதே இன்று காலப் பொருத்தமானதாகும்.

இல்லாவிட்டால் தற்போதைய உலகப் பொருளாதார நெருக்கடியும், பயங்கரவாதமும் அக்கம்பக்கமாக உலகை ஆக்கிரமித்துக் கொள்ளும்.

## எரிகிற வீட்டில் பிடுங்குகிறவர்...........

ஐரோப்பாவிற்கும் வட அமெரிக்காவிற்கும் புலம் பெயர்ந்த தமிழர்களுடைய நிலவரம் வேறு.

ஆனால் வடக்கு கிழக்கிலும், நாட்டின் தென்பகுதியிலும் இந்தியாவிலும் சொல்லொணா துன்பங்களில் உழன்று கொண்டிருக்கும், வாழ்வு மேலும், மேலும் சீரழிந்துக் கொண்டிருக்கும் தமிழர்கள், நாட்டில் எப்போது சமாதானம் வரும்? எப்போது நாம் நிம்மதியாக வாழலாம் என்று எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறர்கள். இப்படியே இன்னும் பத்து வருடங்கள் சென்றால் வாழ்வு எத்தனை மோசமாகிவிடும் என்று இந்தத் தமிழ் தலைமைகள் எண்ணிப்பார்த்ததாகத் தெரியவில்லை.

இந்த அழிவுகளுக்கு தாமும் ஒரு விதத்தில் பாத்திரவாளிகள் என்ற குற்ற உணர்வாவது வேண்டாமா?

ஒரு சமூகத்தின் பொறுப்புள்ள அரசியல் தலைமை என்பது தான் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகத்திற்கு சுதந்திரமும் சுபிட்சமும் நிறைந்த வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கவே பாடுபடும்.

இங்கு எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்ற குரூர செயல்பாடே மிஞ்சியிருக்கிறது.

தமிழ் மக்களின் நலன்களுக்காக எதையும் துறக்கத் தயாரென அதிதீவிர நிலைப்பாட்டை பத்திரிகைகளிலும், வேறு ஊடகங்களிலும் விளம்பரப்படுத்துபவர்கள் தமது நலன்களில் மிகக் கவனமாகத்தான் இருக்கிறார்கள் என்பதை அவர்களது பாராளுமன்ற பதவிகள் மற்றும் வாய்ப்புக்கள் ஊடாக கிடைக்கும் சலுகைகளை தமதாக்கிக் கொள்ளும் அங்கலாய்ப்பில் புரிந்துக் கொள்ள முடியும்.

தென்மராட்சி அழிவுகளைப்பற்றி பேசும் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் சொந்தப் பாவனைக்கு சலுகை விலையில் பல மில்லியன் பெறுமதியான பி.எம்.டபிள்யூ (BMW) கார்களை கொள்வனவு செய்துள்ளாகள்.

யுத்தத்தில் மரணித்த மக்களுக்காகவும் அவலப்படும் மக்களுக்காகவும் துயரப்படுவதாக வெளியில் காட்டிக் கொண்டு சொந்த சொகுசு வாழ்வுக்காக மனதால் ஏங்கிக் கொண்டிருப்பவர்கள் இவர்கள்.

யுத்த சூழ்நிலையில் புதிதாக வடக்கு கிழக்கில் உருவாகியிருக்கும் உயர்குழாத்தினரின் பிரதிநிதிகளே இவர்கள். இவர்கள் வடக்கு கிழக்கில் இறந்து போன இளைஞர் யுவதிகளுக்காக ஒரு சொட்டு கண்ணீர்கூட விட்டிருக்கமாட்டார்கள். யுத்தத்தை விற்று பிழைக்கும் பத்திரிகை உலக வியாபாரிகளும் இவர்களுக்கு முண்டு கொடுப்பவர்களே.

மக்களின் வாழ்வு எவ்வளவு அபாயம்நிறைந்தாக மாறினாலும் இவர்களுக்கு அதைப்பற்றி கவலையில்லை. தாம் பாதுகாப்பான இடத்தில் நிற்பதை

1ம் பக்கத் தொடர்ச்சி

இவர்கள் உறுதி செய்திருக்கிறார்கள்.

20வருட காலத்தில் முன்னெப்பொழுதும் காணாத யுத்த பொருளாதார நெருக்கடிகளை தமிழ் மக்கள் அனுபவிக்கிறார்கள். நாட்டில் ஏற்படும் பொதுவான பொருளாதார, யுத்த நெருக்கடிகளின் ஒரேயளவான பிரச்சினைகளை வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் அனுபவிக்கவில்லை. யுத்தத்தின் நேரடி பாதிப்புக்குள்ளாகும் பிரதேசம் என்ற வகையில் ஏனைய பிரதேசங்களைவிட பல மடங்கு பிரச்சினைகள் இங்கு எதிர்நோக்கப்படுகின்றன.

அழிவின் விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கும் சொந்த சமூகத்தின் துன்பங்கள் தொடர்பாக "சொந்த சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்கா" நிலையிலேயே இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய தேக்க நிலையை உடைப்பதும் சமூகத்தை முன்னோக்கிய பாதையில் வழிநடத்தி செல்வதுமான உருப்படியான தலைமைத்துவம் இன்று தமிழ் மக்களுக்கு வரலாற்று அவசியமாகிவிட்டது.

அந்த தலைமைத்துவம் தமிழ் மக்களை இன்றைய அவலநிலையிலிருந்து விடுவிப்பதற்கு முயற்சிப்பதாகவும் தமிழ் மக்களின்நியாயமான அபிலாஷைகளை வென்றெடுக்க பாடுபடுவதாகவும், ஜனநாயகத்திற்கும், மனித உரிமைகளுக்கும் குரல் கொடுப்பதாகவும் இருக்க வேண்டும்.

## இலங்கை எழுத்தாளர்களுக்கு ஓர் இனிய வாய்ப்பு

கொழும்பு யாழ்ப்பாணம் மட்டக்களப்பு திருகோணமலை போன்ற இலங்கையின் எந்தப் பகுதிகளிலும் வாழும் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்புக்கள் மற்றும் நாவல்களை புத்தகமாக வெளியிட தமிழகத்தைச் சேர்ந்த பிரபலமான பதிப்பகமான மணிமேகலைப் பிரசுரம் முன்வருகிறது.

இந்த இனிய இலக்கிய பணிக்கு மணிமேகலைப் பிரசுரத்துடன் இணைந்து ஊக்கப்படுத்துபவர் இலண்டனில் வாழும் தமிழினி பத்திரிகை ஆசிரியர் திரு.குலேந்திரன். தங்களின் சிறுகதைகள் நாவல்களின் நகல் பிரதியை அனுப்பவேண்டிய முகவரி:-

மணிமேகலைப் பிரசுரம் புலம்பெயராத எழுத்தாளர்களின் புத்தக வெளியீட்டுத் திட்டம்
தபால் பெட்டி எண்-1447
7 தணிகாசலம் சாலை
தியாகராயநகர்
சென்னை -17
இந்தியா.

தேர்வுக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படும் புத்தகங்கள் அச்சானதும் 100 பிரதிகள் நூலாசிரியருக்கு அன்பளிப்பாக வழங்கப்படும்.

இலக்கிய நெஞ்சங்களுக்கு மிகவும் இனிப்பான இத்தகவலை மணிமேகலை பிரசுரம் சார்பாக வழங்கி இருப்பவர் தமிழ்மணி மானாமக்கீன்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 25669

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 27118

141A, மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 23102

சென்செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 32822

மின் அஞ்சல் முகவரி [E-MAIL ADDRESSES]
epiclondon@gn.apc.org - LONDON

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்திபுரம் மக்கள் தண்ணீருக்கு தவம்

1985 ஆம் ஆண்டு சுமார் 85 குடும்பங்களுடன் உருவான சாந்திபுரம் கிராமமானது இன்று வரை மிகவும் பின்தங்கிய கிராமமாக உள்ளது. மழைக்காலங்களில் மக்கள் குடியிருக்க முடியாத சேறும் சகதியும் நிறைந்த பகுதியாக காணப்படுவதுடன் குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே இக் கிராம மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.



இராணுவ நடிவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வந்த மக்களை மன்னார் நகரப்பகுதியில் குடியமர்த்த முடியாத நிலையில் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இந்தக் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று சுமார் 320 குடும்பங்கள் இந்தக் குடியேற்றத்தில் வாழ்கிறார்கள்.

1985 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இரண்டு தண்ணீர் குழாய்களையே இன்றும் சாந்திபுரம் மக்கள் குடிநீர் தேவைக்கு நம்பியிருக்கவேண்டிய நிலையில் உள்ளனர். இதனால் இக் கிராமத்தவர்கள் தண்ணீருக்காக உருக்குலைந்து போன இந்தக் குழாயடியில் பலமணிநேரம் காத்துக் கிடக்க வேண்டியுள்ளது.

நெதர்லாந்து அரசாங்கத்தின் உதவியுடன் கட்டுக்கரை குளத்திலிருந்து மன்னாருக்கு நீர் விநியோகம் செய்வதற்கு முருங்கன் 11ம் கட்டை, வங்காலை, அடம்பன் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கிகள் 1990 ஆம் ஆண்டு புலிகளால் தகர்க்கப்பட்ட பின் மன்னார் மக்கள் குடிதண்ணீருக்காக தொடர்ந்தும் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. காலம் காலமாக கீரி என்னும் இடத்திலிருந்து குழாய் மூலம் விநியோகம் செய்யப்பட்ட குறைந்த அளவிலான தண்ணீரையே அவர்கள் தொடர்ந்தும் நம்பியிருக்க வேண்டியதாயிற்று.

மன்னார் வீதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் 2001 இலிருந்து மன்னாருக்கான குழாய் நீர்விநியோகம் சற்று மேம்படுத்தப்பட்டுள்ளபோதும் சாந்திபுரம் மக்கள் தண்ணீருக்காக தவம்கிடக்கும் நிலையே காணப்படுகிறது.

**கணேசன்**

# இடதுசாரி இயக்கப் போராளி தோழர் ஆஸ்கார் பெரேரா

சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் முன்னை நாள் தலைவரும், மாபெரும் இடதுசாரி இயக்கப் போராளியுமான தோழர் ஆஸ்கார் பெரேராவின் நினைவுதினக் கூட்டம் 16.09.2001 அன்று பி.ப. 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்றது. இலங்கை ஆசிரியசங்கத்தை சேர்ந்த தோழர் க. தியாகலிங்கம் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

இடதுசாரிக் கருத்துக்களை இருட்டடிப்புச் செய்யும் இக்காலத்தில் தோழர் பெரேராவின் நினைவுதினக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது என்பது பாராட்டுக்குரியது என்று அவர் தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தனது உரையில் உழைக்கும் வர்க்கத்தின் நலன்களை பேணாது மனிதனை மனிதன் நசுக்கும் போது தொழிற்சங்கங்கள் உருவாகி தொழிலாளர்கள் தமது உரிமைகள், சலுகைகளை பெற்றனர். நாம் இன்று அனுபவிக்கும் உரிமைகளும் சலுகைகளும் பெறக் காரணமாக இருந்த தொழிற்சங்கவாதிகளின் வரிசையில் தோழர் பெரேரா குறிப்பிடத்தக்கவராவார் என்று குறிப்பிட்டார்.

அடுத்து தோழர் சோ. சிவபாலன் அவர்கள் உரையாற்றினார் அவர் தனது உரையில் தோழர் பெரேரா அவர்கள்இடதுசாரியாக, தொழிற்சங்கவாதியாக, மனிதநேயம் கொண்டவராக, பிரமச்சாரியாக வாழ்ந்து காட்டினார் என்றும் வேலையில் இருந்து ஓய்வு பெற்ற பின்பும் தொழிலாளர்களுடைய நன்மை கருதி தனது பணியை தொடர்ந்து செய்தார் என்றும் குறிப்பிட்டார். நாம் அவரிடமிருந்து கற்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன என்றும், அவை நாம் போராட்டங்களை முன்னெடுக்க உந்துதலாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து இடம் பெற்ற கலந்துரையாடலில் இன்றைய அரசியல் நிலைமைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. இடதுசாரிகளின் கடமைகள், எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது. இடதுசாரிகள் பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆதரிப்பதே மிகவும் பொருத்தமானது என்ற நிலை காணப்பட்டது. வர்க்க ரீதியான ஐக்கியம் பேணப்பட வேண்டும் எனவும் இதன் அடிப்படையில் சகல முற்போக்கு சக்திகளும் ஐக்கியப்படுவது அவசியம் எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஐ.தே.க ஆட்சியிலேயே மக்கள் மோசமாக சுரண்டப்பட்டார்கள் என்றும், வர்க்க ரீதியான ஐக்கியத்தையே தமிழர் விடுதலைக் கூட்டணி எடுத்திருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# சுயலாப அரசியல்

சந்திரிகா அரசின் 7வருட ஆட்சியில் எத்தனை ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள், எத்தனை லட்சம் மக்கள் அகதிகளாக்கப்பட்டார்கள், எத்தனை நகரங்கள், கிராமங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. இதுமாத்திரமல்ல வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் என எங்கும் தமிழருக்கு பாஸ் கெடுபிடிகள், போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் ஆண், பெண், சிறியோர் பெரியோர் என்றில்லாமல் ஆயிரக்கணக்கில் கைதுகள்.



தமிழ் மக்களை வேரோடும் வேரடி மண்ணோடும் அழித்தொழிக்கவென பல ஆயிரம் கோடிகள் பெறுமதியில் யுத்தவிமானங்கள், பல்குழல் பீரங்கிகள்.

சர்வதேச சமூகத்தையும், உலக வங்கியையும் உதவி வழங்கும் நாடுகளையும் திருப்திப்படுத்துவதற்காக பேச்சுவார்த்தை, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், புதிய அரசியல் யாப்பு என புலுடாக்கள்...

ஆதவன்- 02.09.2001

பொதுஜன முன்னணி அரசின் காலகட்டத்தில் நடந்த அத்தனை தேர்தல்களுமே, மிக மோசமான மோசடித் தேர்தல்களாகவே நடந்து முடிந்துள்ளன.

ஆதவன்- 16.09.2001

இவ்வாறு ஆதவன் பத்திரிகையில் எழுதியிருப்பவர் யார் தெரியுமா? இதே பொதுஜன முன்னணி அரசில், 7வருட சந்திரிகா ஆட்சியில் 4வருடங்கள் கடற்தொழில் நீரியல் வள அமைச்சின் ஆலோசகராக ஒட்டிக் கொண்டிருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களே இவ்வாறு எழுதியுள்ளார். பதவி பறிபோனதும் மோகம் தீர்ந்து தமிழ் மக்கள் மீது தீவிர அக்கறை பிறந்திருக்கிறது அவருக்கு.

# உதயன் சொன்னதும், சொல்லாததும். ஜே.வி.பி யின் பத்து எம்பிக்களுக்கும்

## மூன்று கோடி ரூபாவுக்கு சொகுசு கார்கள்!

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்களின் வரிப்பணத்தில் இருந்து சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதை கடுமையாக எதிர்த்து வந்த ஜே.வி.பி அமைப்பு தற்போது அதன் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 2கோடியே 80 லட்சம் ரூபாவுக்கு சொகுசு கார்களை வாங்கவுள்ளது.

ஒவ்வொன்றும் 28 லட்சம் ரூபா பெறுமதியான ரொயாட்டா டபிள்கப்ஸ் சொகுசு கார்களை ஜே.வி.பி கொள்வனவு செய்ய இருப்பதாக ராவய சிங்கள வார இதழ் தகவல் வெளியிட்டிருக்கின்றது.

சுமார் 5லட்சம் ரூபா பெறுமதியான இந்தியன் மாருதி கார்களைத் தவிர வேறு எந்த சொகுசு வாகனங்களையும் வாங்கப் போவதில்லை எனக் கூறியிருந்த ஜே.வி.பி தற்போது கோடிக்கணக்கான ரூபா பணத்தைச்செலவு செய்து புதிய சொகுசு கார்களை வாங்கவுள்ளது.

இதேவேளை அண்மையில் எம்.பியாக நியமனம் பெற்ற சிஹல உறுமய கட்சியைச் சேர்ந்த சம்பிக்க ரணவக்கவும் 72 லட்சம் ரூபா பெறுமதியான ரொயாட்டா லாண்ட் குரூசர் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்யவிருக்கிறார்.

நாட்டின் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், ஏனைய 71 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட புதிய ரக கார்களைக் கொள்வனவு செய்ய இருப்பதாக ராவய பத்திரிகை தெரிவித்துள்ளது.

உதயன் – 10–09–2001

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஐ.தே.க தூய்மைப்படுத்த சங்கல்பம் கொண்டுள்ள அதேவேளை, அக்கட்சியின் சில எம்பிக்கள் நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கு கிடைக்கக்கூடிய சுகங்களையும் அனுபவிப்பதற்காக அங்கலாய்க்கிறார்கள்.

வாழ்க்கையில் தங்களது தனிப்பட்ட அந்தஸ்தை உயர்த்திக்கொள்வதிலும், பெரும் பணக்காரர்கள் ஆவதிலும், கிடைக்கும் வசதிகளை பற்றிப்பிடிப்பதிலிருந்து தங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பொதுஜன முன்னணி உட்பட ஜே.வி.பி., எம்.ஈ.பி., எஸ்.எல்.எம்.சி., து.ஆ., சிஹல உறுமய, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (ACTC) மற்றும் தமிழ் ஈழ விடுதலைக் கழகம் (TELO) ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அடக்கம்.

இந்த அரசியல்வாதிகளுக்கு நாட்டின் மோசமான பொருளாதார நிலையோ அல்லது யுத்த அழிவுகளோ ஒரு பொருட்டல்ல. அரசாங்கத்தின் கஜானா (திறைசேரி) எப்போதுமில்லாதவாறு அடிமட்டத்துக்குச் சென்றுவிட்டதை அறிக்கைகள் சுட்டிக்காட்டிய போதிலும் 71பா.உ. க்கள் பல லட்சங்கள் பெறுமதிவாய்ந்த புத்தம் புதிய சொகுசு வாகனங்களைப் பெறுவதற்கு.

இந்த 71எம்.பிக்களும் ஓடர் செய்துள்ள சொகுசு வாகனங்களின் விபரம் இதோ.

மிட்சுபிஷி மொன்ரெறோஸ்–48, மேசிடிஸ் பென்ஸ்–03, ரொயோட்டோ லான்ட் குறூசேஸ்–05, ரொயோட்டோ டபிள் கப்ஸ்–07, ரொயோட்டோ ஹயஸ் வான்–02, நிசான் பெற்றோல்ஸ்–02, பி.எம்.டபிள்யூ–03, அம்பசிடர் கிளாசிக்–01

இவையாவும் அந்த 71 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதாவது அதிர்ஷ்ட தேவதை செல்வச் சக்கரத்தில் வேகமாகச் சுழன்று வரும் அவர்களுக்காக தருவிக்கப்பட இருக்கின்றன.

இலங்கையில் ஒரு புத்தம் புதிய மிட்சுபிஷி மொன்ரெறோ வாகனம் 6 மில்லியன் ரூபாவுக்கு மேல் விலை போகிறது. புத்தம் புதிய ரொயோட்டா டபிள் கப் சுமார் 2.8 மில்லியன் ரூபாவாகும். புதிய ரொயோட்டா ஹயஸ் வான்களும் கிட்டத்தட்ட அதே விலைதான் (தீர்வையுடன்) ஒரு புதிய அதிசொகுசு ரொயோட்டோ லான்ட் குறூயசர் 72 மில்லியனுக்கு விற்கப்படுகிறது. ஒரு பி.எம்.டபிள்யூ அதன் மொடலையும் வாங்குபவரின்

தொடர்ச்சி 05ம் பக்கம்

# ஆணைக்குழுக்களால் தமிழ்மக்களுக்கு விமோசனமில்லை

**ரெலோ முக்கியஸ்தர்**

பத்து பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஜே.வி.பி அரசுடன் பேச்சு நடத்த முடியுமானால் ஏன் ஒன்பது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசுடன் பேச முடியாது. தமிழ் இனத்தின் கோரிக்கையை முன்வைத்து மூன்று மாத காலத்துக்குத் தகுதிகாண் அரசாங்கம் ஒன்றை அமைக்க அனுமதிப்பதன் மூலம் இந்த நாட்டின் அரசியலில் தமிழ் மக்களின் வாழ்வில் ஒரு புதிய திருப்பு முனையை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறு வல்வெட்டித்துறை நகர சபையின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசிய சபையின் தலைவரும், ரெலோ அமைப்பின் மத்திய குழுவின் சிரேஷ்ட உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்.

ஆணைக்குழுக்களை அமைப்பதாலோ, சர்வஜன வாக்கெடுப்பை நிறுத்துவதாலோ, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதாலோ தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைத்துவிடப் போவதில்லை. அத்துடன் இந்த அரசைப்பதவி கவிழ்த்து பொதுத் தேர்தல் நடைபெற்றாலும் தமிழ் இனத்துக்கு எதுவித பிரயோசனமும் இல்லை.

தமிழ்க் கட்சிகள் இராஜதந்திர முறைகள் மூலம் செயற்பட்டு தமிழினத்தின் உரிமையை, விடுதலையை வென்றெடுக்க வேண்டும்.

தமிழ் மக்கள் சுயகௌரவம், சுயமரியாதை என்பவற்றுடன் வாழக்கூடிய ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்தத் தமிழ் கட்சிகள் முயற்சிக்க வேண்டும்.

ஜே.வி.பி யின் ஆதரவுடன் தகுதிகாண் அரசு அமைக்கப்பட்டாலும் வடக்கு கிழக்கு யுத்தம் தொடரவே செய்யும்.

அடுத்த பொதுத் தேர்தலில் சிங்கள கட்சிகள் அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றால் தமிழினத்தின் நிலை என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இரண்டு பேரினவாதக் கட்சிகள் இணைந்து ஆட்சி அமைப்பதும் தமிழினத்தை நசுக்கவே வழிகோலும்.

இவற்றைக் கருத்திற் கொண்டு தமிழ்க்கட்சிகள் இனிமேல் செயற்பட வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ இரண்டின் உயர்பீடத்துக்கும் இதைப்பற்றி எடுத்துக் கூறியுள்ளோன்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசைப் பார்த்து ஐக்கிய தேசிய கட்சியினர் தமிழீழத்துக்கு மாற்றுத் திட்டம் என்ன என்று கேட்கின்றனர். ஆனால் ஐக்கிய தேசிய கட்சியினர் ஒற்றையாட்சி முறையை கைவிடத் தயாரில்லை.

ஐக்கிய தேசிய கட்சி தமிழினத்தின் பிரச்சினைப்பற்றி எதுவும் கூறாமல் சந்திரிகாவின் அரசை வீழ்த்த வேண்டும் என்று செயற்படுகிறது. [illegible] என்றார்.

தினக்குரல் 04-09-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியரின் ஆய்வுகள் பூரணப்படுத்தப்பட்டவையா?

யாரும் எதைப்பற்றியும் ஆய்வு செய்யலாம். இன்னார்தான் இன்னதைப்பற்றி ஆய்வு செய்ய வேண்டும் என்ற வரையறை ஏதும் கிடையாது. ஆனால் அந்த ஆய்வின் முடிவில் வெளியிடப் படும் தகவல்கள் பூரணப்படுத்தப்பட்டவையாக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் அந்த ஆய்வை முழுமை யான ஆய்வாக ஏற்றுக் கொள்ள முடியாது. சாமானியர்கள் தமது ஆய்வில் தவறிழைத்தால் ஓரளவு மன்னிக்கலாம். பேராசிரியர்கள் பிழை விட்டால் வருங்காலச் சமுதாயம் இவர்களின் பிழையான ஆய்வுகளை மையமாக வைத்தே தமது ஆய்வுகளை மேற்கொள்ளும் அபாயம் நேரும்.

போராசிரியர் சிவத்தம்பி எழுதிய Sri Lankan Tamil Society and Politics என்ற நூல் நியூசெஞ்சரி புக் ஹவுஸ் வெளியீடாக 1994ம் ஆண்டு வெளிவந்தது. இந்நூலில் பேராசிரியர் சிவத்தம்பி விட்ட தவறுகளை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தனது கட்டுரைகளுக்கு ஆதாரமாக மேலைநாட்டு எழுத்தாளர்களின் நூல்களையெல்லாம் மேற்கோள் காட்டியுள்ளார் பேராசிரியர். தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த ஒரு சமூகத்தைப்பற்றி எழுதுவதற்கு மேலைத்தேய எழுத்தாளர்களின் நூல்களைத்தேடி அலையத் தேவையில்லை. தனது நாட்டிற்குள்ளேயே ஒரு ரவுண்ட் அடித்துவிட்டு வந்தால் போதுமானது.

பிராமணர்களும் பிராமணரல்லாத சைவகுருமாரும் கோயில்களில் தொழில் புரிகின்றனர். சைவகுருமார் வேளாளர் சாதியினர். (பக் 3.)

இலங்கையில் வீரசைவர்களும் கோயில்களில் தொழில் புரிந்து வருகின்றனர். உ-ம்:- திருகோணமலை கோணேசர் கோயில், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர் கோயில், யாழ் கோட்டை முனியப்பர் கோயில் இது பேராசிரியருக்குத் தெரியவில்லை போலும்.

யாழ்ப்பாணத்தில் காணப்படும் முக்கிய சாதிகளை 17ம் பக்கத்தில் பட்டியலிட்டுள்ள பேராசிரியர் சாண்டார் என்ற சாதியை அதில் சேர்த்துக்கொள்ளவில்லை. யாழ்ப்பாணத்தில் முக்கிய சாண்டாரக் கிராமங்களாக ஆனைக்கோட்டை, வண்ணார்பண்ணை, நவாலி, சங்கானை கிழக்கு, சண்டிலிப்பாய் என்பன விளங்குகின்றன. ஆனைக்கோட்டையில் மட்டும் 4400 பேர் 680 வீடுகளில் வசித்து வருகின்றனர். இவ்வாறு Tamil Culture in Ceylon என்ற நூலில் சென்னைப் பல்கலைகழக முன்னாள் பேராசிரியர் எம்.டி. ராகவன் குறிப்பிட்டுள்ளார் (பக். 162)

நளவர்கள் கள் சீவுபவர்கள். பள்ளர் அடிமட்டத் தொழில்களைச் செய்யும் தொழிலாளர்கள் (பக். 34.)

இருபகுதியினரும் யாழ்ப்பாணத்தில் இரண்டு தொழில்களையும் செய்து வருகின்றனர்.

பிராமணர்களும் சைவகுருமாரும் கோயில் உரிமையாளர்களல்ல. "மாவிட்டபுரம் கோயில் அச்சுவேலிப் பிள்ளையார் கோயில் தவிர." (பக் 40, 41.)

கீரிமலை நகுலேஸ்வரம், கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோயில், யாழ் கோட்டை முனியப்பர் கோயில் போன்ற பல கோயில்கள் இன்றும் ஐயர்மாரின் நிர்வாகத்தின் கீழேயே உள்ளன. பிராமணர், சைவக்குருமார், வீரசைவர் போன்றவர்களின் நிர்வாகத்தின் கீழ் இவை இயங்குகின்றன.

நவராத்திரி ஒன்பதாவது மாதமான கார்த்திகையில் வருகிறது (பக் 48.) கார்த்திகை எட்டாவது மாதம் ஒன்பதாவது அல்ல. பார்க்க வாக்கிய அல்லது திருக்கணித பஞ்சாங்கம்.

பிரதான போராளி இயக்கங்களை 153,154ம் பக்கங்களில் பட்டியலிட்டுள்ளார் பேராசிரியர். அவையாவன தமிழீழ விடுதலைப் புலிகள், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, தமிழீழ ராணுவம்.

ஐந்து பாரிய போராளி இயக்கங்களின் பட்டியலில் ஈரோஸ் இடம் பெறவில்லை.

"ஈ.என்.எல்.எப் என்ற பெயரில் பெரிய போராளி இயக்கங்களான விடுதலைப் புலிகள், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப், என்பன ஒரு குடையின் கீழ் இணைந்து கொண்டன" (பக்167.)

இந்தப் பட்டியலில் ரெலோவைத் தவற விட்டுவிட்டார் பேராசிரியர்.

அண்மையில் தமிழக அரசு கூட சிறந்த தமிழறிஞர் விருதை பேராசிரியர் சிவத்தம்பிக்கு வழங்கியிருந்தது. அதே தமிழக அரசு சிறந்த நடிகராக ரஜனிகாந்தையும், சிறந்த நடிகையாக சிம்ரானையும், சிறந்த திரைப்படமாக படையப்பாவையும் தெரிவு செத்திருந்தமையும் குறிப்பிடத் தக்கது. ஒப்பீட்டு ரீதியில் பார்க்கும் போது சிவதம்பிக்கு இந்த விருது பொருத்தமானதாகவே தோன்றுகிறது.

இந்த விமர்சனத்தை போராசிரியரின் நூல் வெளிவந்தவுடனேயே எழுதினேன் ஆனால் யாழப்பாணப் பத்திரிகைகள் எவையும் பேராசிரியரை விமர்சிக்கத் தயாராயில்லை. பின்னர் மாற்றுப் பத்திரிகையான சரிநிகருக்கு அனுப்பினேன். மாற்றுப் பத்திரிகையான சரிநிகர்கூட சிவதம்பியைபற்றி விமர்சிக்கத் தயாராயில்லை.

**பரமன்**

# 2001இல் சாதியம்

புலம் பெயர்ந்த நாடுகளில் கூட நம்மவர்கள் சாதியை மிகவும் இறுக்கமாகக் கடைபிடித்து வருவதாக புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து வரும் சஞ்சிகைகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் சாதிப்பெருமை பேசுவதில் என்ன தவறு இருக்கிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் பிரபல பெண்ணியல்வாதி ஒருவரின் தாயின் கல்வெட்டைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அக் கல்வெட்டின் முகப்பு மட்டையில் 'சைவவேளாண்குலதிலகரும்' என அச்சிடப்பட்டுள்ளது.

கல்வெட்டை வெளியிட்டவர் பீஜிங்கில் போய் இலங்கைப் பெண்கள் மீதான ஒடுக்குமுறை பற்றிப் பேசிவிட்டு வந்ததுடன் அதைப்பற்றி பத்திரிகைகளிலும் தொடர் கட்டுரை எழுதியவர். யாழ் பல்கலைகழக வருகை விரிவுரையாளரான இவர் கோட்டக்கல்வி அதிகாரியாகப் பணியாற்றுவதுடன் சிறுவர் உளவளத்துணை நிலையமொன்றையும் நடத்தி வருகிறார்.

யாழ்ப்பாணத்துச் சைவ வேளாள ஆதிக்கத்தைக் கட்டிக்காப்பதில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் வலம்புரிப் பத்திரிகை அரும்பணியாற்றி வருகிறது. வலம்புரி ஆசிரியர் விதுரன் என்ற பெயரில் வலம்புரியில் ஒரு தொடர் கட்டுரை மதமாற்றம் பற்றி எழுதியுள்ளார்.

இக் கட்டுரைத் தொடரில் 16.07.2001 அன்று தனியே மணியடிப்பதும், கற்பூரம் காட்டுவதும்தான் அந்தணர்களின் வேலை என்றால் அதைச் செய்வதற்கு அந்தணர்கள் தேவையில்லை. றோட்டால் போகிற ஒரு ஆண்டியைக் கொண்டும் செய்விக்கலாம் என எழுதியுள்ளார். ஆண்டி என்றால் பண்டாரம். இவ்வாறு எழுதியதன் மூலம் பண்டாரங்களை தாழ்வாகவும் பார்ப்பனர்களை உயர்வானவர்களாகவும் சித்தரிக்க முயல்கிறது வலம்புரி.

**பரமேஸ்**
**யாழ்ப்பாணம்**

## அத்துமீறல்

# கல்லடிப் பகுதியில் 1000 மீனவர்கள் பாதிப்பு

மட்டக்களப்பு கல்லடி கடலோரத்தில் அனுமதியில்லாமல் கடல்கரைப்பாட்டு ஒதுக்கப்பட்ட இடத்தில் கொட்டிலமைத்து இயந்திரப்படகு மூலம் கடலட்டை, கலர் மீன்,பிடிப்பதால் இப்பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற சுமார் 1000 மீனவர்கள் தொழில் வருமானம் இல்லாமல் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

கரைப்பாட்டுப் பகுதியில் இயந்திரப்படகின் கடும் ஓசை காரணமாக மீன்கள் கரைபகுதிக்கு வருவதில்லை. இதனால் மீனவர்கள் கரைப்பகுதியில் மீன் பிடிக்க முடியாதுள்ளது.

ஆழ் கடலில் இரவிலும் பகலிலும் மீன் பிடிக்கச் செல்லும் பகுதியில் கடலிலுள்ள தீடைகளில் கடலட்டை, கலர் மீன் பிடிக்கப்படுவதனால் மீன்கள் வந்து தங்குவதில்லை ஆகவே மீனவர்கள் இங்கு மீன் பிடிக்க இயலாதுள்ளது.

கடலில் உள்ள பெரிய மீன்களின் இரையானது கடலட்டையே. ஆகவே கடல் மண்ணில் உள்ள கடலட்டைகளைப் பிடிப்பதனால் பெரிய மீன்கள் இரை தேடி வர வாய்ப்பில்லை.

கடலிலுள்ள தீடைகளில் கனிவளங்களான வெளிச்சக் கற்கள், சங்கு, நத்தை, வியாபார நோக்கத்துடன் அகற்றப்படுவதனால் இங்கு மீன்கள் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை.

கடலட்டைகள் பிடித்து கரையில் அவித்து வரும் நீரினால் சூழல் மாசடைகிறது.



கடலட்டை, கலர் மீன் பிடிப்பவர்கள் அமைத்திருக்கும் வாடியின் காணியின் அரைவாசி பிரதேச செயலாளரினால் வேறு நபருக்கு குத்தகைக்கு விடப்பட்டு மீதி அரைவாசிப் பகுதி மீன் பிடிப்படகுகள் இழுத்து தங்க வைப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடம். எதுவித அனுமதியும் இல்லாமல் அந்த நபர் இக்காணியில் வாடியமைத்திருக்கின்றார்.

மேற்கூறிய காரணங்களாலும் இராணுவத்தில் ஒரு சிலரின் தனிப்பட்ட செல்வாக்கின் காரணமாக இப் பகுதியில் பலாத்காரமாக வாடியமைத்து பாதிக்கப்பட்ட மீனவர்களையும் மிரட்டி தொழில் செய்கின்றனர். இவரின் இச் செயல் காரணமாக சுமார் 1000 மீன் பிடித் தொழிலாளர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் இது சம்பந்தமாக கடலட்டை கலர் மீன் பிடிப்பதை உடனடியாக நிறுத்துமாறு ஒரு மாதத்துக்குள் மூன்று முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தால், இந்நபர் தங்கியிருக்கும் கரைப்பாடு உரிமையாளர் ஊடாக இவரை உடனடியாக இடத்தைவிட்டு வெளியேறுமாறு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

இவர் அரசாங்க காணியில் இச் செயலை மேற்கொள்வதால் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் கிராம அதிகாரியூடாக இவரை அவ்விடத்திலிருந்து எழுப்புவதற்கு பொது அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள மீன்பிடிப்பணிப்பாளரினால் மட்டக்களப்பு அரச அதிபர், மட்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இராணுவ பிரிகேடியர் யாவருக்கும் இவரை உடனடியாக இவ்விடத்தை விட்டு அகற்றுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி ஓர் கண்டன பேரணி நடத்த மட்டக்களப்பு பிராந்திய ஈ.பி.ஆர்.எல்.எப் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக காரியாலயத்தில் கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத்திற்கமைய தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள், மட்டு மீன்பிடிச் சங்கங்கள் ஆகியன இணைந்து மீனவத் தொழிலாளர்களை பட்டினி சாவிலிருந்து காப்பாற்ற ஒத்துழைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ஜனாதிபதி, மீன்பிடி அமைச்சர், மட்டக்களப்பு அரச அதிபர், வடக்கு கிழக்கு ஆளுனர், கிழக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சர் பேரியல் அஷ்ரப், பிரதியமைச்சர் கணேசமூர்த்தி ஆகியோருக்கும் வடக்கு கிழக்கு முன்னாள் அங்கத்தவரும் ஈ.பி.ஆர்.எல்.எப் முக்கியஸ்தருமான இரா. துரைரட்ணம் தொலை நகல் மூலம் அறிவித்துள்ளார்.

# த.வி. கூட்டணி பா. உறுப்பினரின் இரட்டை வேடம்!

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் வெளியிட்ட கருத்துத் தொடர்பாக அவரை தனிப்பட்ட முறையில் சந்தித்த மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் த.வி.கூட்டணி முக்கியஸ்தருமான ஜோசப் பரராஜசிங்கம் பா.உ., ஈ.பி.டி.பி தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொண்டுள்ளதாக திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் நம்பிக்கை அற்றவர்களாகக் காணப்படுவது வெளிப்படையானது. இதனால்தான் அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றை வலியுறுத்தி வருகின்றனர். புலிகளின் நிலைப்பாட்டிற்கு முற்றிலும் எதிர்மாறாக இலங்கைப் பாராளுமன்றத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் யோசப்பரராஜசிங்கம் பா.உ உண்மையில் திறந்த மனத்துடன் மேற்கூறிய கருத்தை வெளியிட்டிருப்பின் தமிழர் சார்பு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இராஜினாமாச் செய்து புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவத்தை வெளிப்படையாக அங்கீகரிக்க வேண்டும். அதை விடுத்து வெறுமனே அரசியல் லாபம் என்ற குறுக்குவழிப் பிரபல்யத்திற்காகப் புலிகளுக்காகக் காவடி தூக்கும் பாசாங்குகளின் பட்டியலில் ஒன்றாகவே யோசப் பரராஜசிங்கம் பா.உ அவர்களின் கருத்தை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த 17 வருடங்களாக வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பாரிய நெருக்கடிகளின் தோற்றத்துக்கான பிரதான காரணிகளில் முக்கியமானது த.வி.கூட்டணியின் சந்தர்ப்பவாத அரசியலின் இரட்டை வேடம் தாங்கிய போக்கேயாகும். தொடர்ந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி முக்கியஸ்தர்கள் பலரும் தமது சந்தர்ப்பவாதப் போக்கைக் கைவிடத் தயாராகவில்லை என்பதனையே யோசப் பரராஜசிங்கம் பா.உறுப்பினரின் அண்மைக்காலப் போக்குகள் வெளிப்படுத்தி வருகின்றன.

செஞ்சக்தி- ஏப்ரல் 2001
(ஜே.வி.பி. யின் தமிழ் அரசியல் ஏடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TBC தமிழ் வானொலி, வான்முரசு சஞ்சிகை மீதான தமிழ்ஈழ விடுதலைப்புலிகளின் வன்முறை

TBC தமிழ் வானொலி மற்றும் அதன் மாதாந்த சஞ்சிகையான வான் முரசு இவைகட்கு எதிராக தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் ஒரு புதிய வன்முறையையும் பிரச்சாரத்தையும் ஆரம்பித்து ள்ளனர். சுவீஸில் தமிழ் கடைகளிலிருந்து வான்முரசு இதழை எடுத்துக் கிழித்து எறிந்த தோடு அதன் விற்பனைத் தடையோடு வான் முரசும் TBC யும் தமக்கு எதிராக பொய்ப்பிரச்சா ரம் செய்யும் போக்கைக் கொண்டுள்ளன என்று எச்சரிக்கை செய்துள்ளனர்.

இது TBC வான்முரசு இரண்டையும் பகிஷ் கரிக்க கோரும் அறிவிப்பே ஆகும். இந்த நடவடிக்கைகளில் TBC யின் போட்டிச் சேவை யாகவும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டிலும் இயங்கும் IBC தமிழ் வானொலியும் நசிக்கிடாமல் இறங்கியுள்ளது.

புலிகளின் வன் முறையும் ஜனநாயக மற்றும் மாற்றுச் சிந்தனை மறுப்பும் தாம் ஒரு போதும் சாகப்போவதில்லை என்று மீண்டும் மீண்டும் அறிவிக்கின்றன. கடந்த இருபதாண்டுகளாக புகலிடத்தில் புலிகளின் கொலைகள் வன்மு றைத்தாக்குதல்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகள் மேலான தடைகள் வரலாற்றை தமக்குச் சாதக மாய் இட்டுக்கட்டும் பிரச்சாரங்கள் என்பவற்றால் நிரம்பியுள்ளன. சுதந்திரமான கருத்துக்கள் மாற் றுச் சிந்தனை வடிவங்கள் என்பன வெடி வேண் டித்தரப் போதுமான நடவடிக்கைகளாகவும் புலி களை வீணாக ஆத்திரம் ஊட்டும் செயல்களாக வும் புரிந்து கொள்ளப்படுகின்றன.

சமூக உணர்வாளர்கள் இனம், சாதி, மதம் கடந்த மனித சிந்தனையாளர்கள் போன்றோர் களினதும், அமைப்புக்களினதும் கருத்துக்கள் சிறிலங்கா அரசின் கூலிகளின் கருத்துக்களாக வும், அரசு சார்பு தமிழ்க் குழுக்களது, நபர்களது சிந்தனைகளாகவும் புலிப் பிரச்சாரங்களால் இட் டுக்கட்டப்படுகின்றது. உண்மைக் கருத்தியல் களை சந்தர்ப்பவாதமாய் திருத்திப் புரட்டும் ஈனத்தனம் என்பது புலிகளுக்கு கைவந்த கலாச் சாரமாகும்.

தமிழ் தேசிய விடுதலை சம்பந்தமான மார்க் சிய மதிப்பீடுகளைக் கண்டு புலிகள் அஞ்சிச் செத்தனர். புலிகள் புகலிடத்தில் விரும்புவது இலங்கை போன்று தன்னுணர்வோ சுய அடை யாளமோ அற்ற மனிதம் பறிக்கப்பட்ட தம்மை மட்டுமே சதா தொழுது பின் தொடரக்கூடிய ஒரு மனித மந்தையைப் படைக்க விரும்புகின்றனர்.

புகலிடத்தில் தமிழ் மக்களின் அறிவியல் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் தெருச்சண்டி யர்களாக சொந்த மக்களின் சிந்தனை வரம்பை கட்டுப்படுத்தி இயக்குபவர்களாக இவர்கள் உள்ளனர். அரசியல் சமூக கலைசார்ந்த சகல வடிவங்களிலும் இவர்களின் கட்டளைகள் எச் சரிக்கைகள் சர்வாதிகார அறிவுறுத்தல்கள் விடு க்கப்படுகின்றன.

இந்த மனிதம் துறந்த அரசியல் மறுத்தோடி களின் அடக்கு முறைச் செயற்பாடுகள் இப்போது TBC, வான்முரசு இவைகள் மேல் முற்றுகையி டப்பட்டுள்ளன. செயற்படுத்தமுடியாத வண்ணம் நிர்ப்பந்தங்களை சுமத்தி தடை செய்து புகலிடப் பரப்பிலிருந்து அகற்றி விடுவதன் மூலம் தம் கடைந்தெடுத்த ஊதுகுழலான IBC க்கு புதிய தடையற்ற செழுமையான வாய்ப்புக்கள் மக்கள் மத்தியில் கிடைக்கும் என்று நம்புகின்றனர். புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பதைத் தவிர TBC யும் கிட்டத்தட்ட IBC போன்ற குண நலன்களையுடையதுதான் புகலிடத் தமிழ் மக்கள் மத்தியில் பொதுவாயுள்ள சமயம், மொழி சார்ந்த நம்பிக்கைகளையும் இனம் சார்ந்த போக் குகளையும் பயன்படுத்திக் கொண்டு கடைவிரிப் பதே இவர்களது போக்கு.

TBC மேலான புலிகளின் தாக்குதல் திட்ட மிட்ட நடவடிக்கையே வான்முரசு, TBC இவை களுக்கு எதிரான தடைகளாகும். சுவிஸ் புலிக ளின் வன்முறைக்கு TBC எவ்வாறு விடையளி த்தது என்பது கவனத்திற்குரியது.

இது ஏதோ சுவிஸ் புலிப்பொடியன்களின் தவறு. பொறுப்பற்ற செயல் என்ற தோரணை யில் புலிகளின் தலைமை பீடத்திற்கு நீதி நியாயம் கேட்டு விண்ணப்பித்தனர். தேசியத் தலைவருக்கு மேன்முறையீடு செய்யப்பட்டது. மேலும் புலிகளின் அலுவலகம் முன்பு உண் ணாவிரதம் இருக்கப்போவதாய் செய்தி சொன் னார்கள். இவ்வாறாக உதைத்த கால் முன்பு மண்டியிட்டு கிடந்து நீதி கேட்டு புலிகளிடம் தவம் கிடந்தனர். உண்மையில் TBC புகலிடத் தமிழ் மக்களிடமும் புலிசாராத ஏனைய அரசியல் கலை இலக்கிய அமைப்புக்களிடமும் எடுத்துச் செல்லவில்லை என்பது மட்டுமல்ல இவை அதன் சிந்தனை வட்டத்திற்கு எட்டாத காரிய மாகவும் இருந்தது.

புலிகளின் தலைமைப்பீடம் சார்பில் தமிழ்ச் செல்வன் TBC க்கு அனுப்பிய கடிதத்தில் TBC யை தமக்கு எதிராக பொய்ப்பிரச்சாரம் செய்பவர்கள் எனவும் ஆதரவு போல் வேடமிட்டு தமக்கு எதிராய் செயற்படுபவர்கள் என்ற கருத்து ப்பட கண்டித்து இறுதி எச்சரிக்கையும் விட்ட தோடு சுவிஸ் புலிகளை அச்சாக் குஞ்சுகள் என்று பாராட்டாத குறையாக உச்சி மோர்ந்து உசார் வழங்கியது.

TBC வான்முரசு குழுவினர் தாம் புலிகளின் அடாத்தை சிந்தனை மறுப்பை வெளியே கொ ண்டுவரும் பிரச்சாரப்படுத்தும் உத்தியாகத்தான் புலித்தலைமைக்கு வேண்டுகோள் விட்டதாய் இரகசிய செய்தி வாசிக்கக்கூடும். இது பகுதி உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் TBC யும் புலிகளின் மேல் விமர்சனமற்ற ஆத ரவு குத்தகை பிரச்சாரப் போக்கையே வழி நட த்தியது. ஊக்குவித்தது என்ற குற்றச்சாட்டிலிரு ந்து அது ஒருபோதும் தப்ப முடியாது.

இலங்கை அரசும் இராணுவமும் தமிழ் மக்களுக்கு செய்த கொடுமைகளை சுதந்திரமாய் பேச முடிந்தவர்களால், அதை நினைவூட்டும் விசேட நிகழ்ச்சிகளை நடாத்தி தமிழ் மக்களை உணர்வு கொள்ள வைத்தவர்களால் தமிழ் மக்களின் சொந்த போராட்டத்தின் நன்மை தீமை களைப் பேச, வாய்திறக்க முடியவில்லை.

அனுராதபுரத்தில் செய்தது சரி இன்னும் செய்ய வேண்டும் என்று கூட வெறித்தனமான குரல்கள் புகலிடத் தமிழ் மக்கள் செவியில் வந்து விழுந்தமைக்கு தாம் பொறுப்பு இல்லை என்று இவர்கள் கூறமுடியாது. சிறிலங்கா அரச பயங்கரவாதத்தின் தமிழ் மக்கள் மீதான கொ லைகளை புலிகளின் சிங்கள மக்கள் மேலான பயங்கரவாதத்தால் நியாயப்படுத்திவிட முனைந் தனர். ஒரு ஒடுக்குமுறை இராணுவத்திற்கும் போராளிகளுக்கும் இடையேயான அடிப்படையான வித்தியாசங்கள் மனித மதிப்பீடுகள் குறித்த சிந்தனைகள் கூட இவர்களிடம் தட்டுப்படவில்லை.

சிங்கள மக்கள் மத்தியிலுள்ள இடதுசாரி அமைப்புக்கள் மனிதாபிமான சக்திகளின் தமிழ் மக்களுக்கு ஆதரவான செய்திகளைக் கூட விட்டுவிட்டு வெறிகொண்ட சிங்கள இனவாத அமைப்புக்கள், பௌத்த அமைப்புக்களின் அறி க்கைகளை மீண்டும் மீண்டும் ஒலிபரப்பி தமிழ் மக்களை வெறியூட்ட முற்பட்டனர். இலங்கை அரசு, மற்றும் இராணுவம் சிங்கள இனவாத சக்திகளின் தமிழ் எதிர்ப்பை முழு சிங்கள மக்களும் தமிழ் மக்களை எதிர்ப்பதாய் சோடனை செய்ய முனைந்தனர்.

தமிழ்த் தேசிய உணர்வானது மனிதநேயப் பரப்புக்களை தாண்டி வெறுமனே தன் சொந்த குறுகிய இனப்பெருமையில் மூழ்கவும் இவர்களது பிரச்சாரங்களும் உடந்தையாக இருந்தன.

புலிகளின் கடந்தகால சர்வாதிகாரத்தை பேசாமல் விடுவதன் மூலம் அவர்கள் நிகழ்கால சர்வாதிகாரத்திலிருந்து தப்பிவிடமுடியும் என்று அப்பாவித்தனமாக இவர்கள் நம்பினார்கள்.

TBC யினர் உண்மையில் புகலிடத்தில் புலிகளின் பணபலம், பிரச்சாரபலம், நிறுவனம யப்பட்ட பலம், அதிகாரம், ஆள், அம்பு என்பவற் றை கண்டு மிரண்டனர். அவர்கட்குப் பயந்தடங் கிப்போவதே இப்போதைக்கு புத்தி என்ற சராசரி யான கருத்தியல்களைக் கொண்டிருந்தனர். மாவீரர்தினக் கொண்டாட்டம் முதல் லண்டனில் புலிகள் மீதான தடைகளின் எதிர்ப்பு வரை புலிச்சாதனங்களை மிஞ்சும் வண்ணம் நடந்துக் கொண்டனர். TBC யும் வான்முரசும் அரசியல் சிந்தனையின் அவசியத்தாலோ தமிழ் விடுதலை மேலுள்ள கரிசனையாலோ இவர்கள் இப்படி நடந்து கொள்ளவில்லை. மாறாக புலிக்கு உத விப்பிரச்சாரம் செய்து இக்கட்டான சமயத்தில் கைகொடுத்து நல்ல பிள்ளை பெயரெடுக்கும் பிழைப்புவாதப் போக்குமாகும்.

புலிகளின் தத்துவ வித்தகனான அன்ரன் பாலசிங்கம் அண்மையில் லண்டனில் நடந்த புலிகளின் நிகழ்வொன்றில் சந்திரிகாவைப் பற்றி படுபச்சையான பாலியல் பகிடிகளை விட்டதும் ஆண் ஆதிக்கதிமிர் முத்தி தானும் பிரபாகரனும் சந்திரிக்காவை யார் வைத்திருப்பது என்பது பற்றி பேசியதாய் அடித்த நக்கல்கள் தமிழ் மக்களின் அரசியல் பண்பாட்டுக்கு கிடைத்த தலைகுனிவாகும். பெண்கள் மீதான ஆணாதிக்க அவமதிப்பும் ஆகும். பாலசிங்கத்தின் இந்த பேச்சு நடந்து கொண்டிருந்தபோது புலிக்கு பெண்விடுதலை புத்தகங்கள் எழுதித் தந்த அடேல் பாலசிங்கமும் மேடையில் வீற்றிருந்த போது தான் எழுதிய பெண்விடுதலைக்காக விசுவாசமாக ஒரு சொல்லும் சொல்லவில்லை. சந்திரிக்காவின் சிங்கள இனவாதத்தை அதனு டனான ஏகாதிபத்திய உறவை தமிழ் மக்களுக்கு சொல்லித்தர முதுகெலும்பு அற்றவர்கள் தனிப் பட்ட சந்திரிகாவை சுட்டி பெண் என்று பழித்து பாலியல் சார்ந்த பகிடிவிட்டு அரசியலில் இருந்து தப்பிக்கின்ற புத்திதான் நிலவுகிறது. இப்படியாக தமிழ் மக்கள் மேல் மலிவு அரசியல் சுமத்தப்படு கிறது. காடைத்தனமான பேச்சுக்கள் அரசியல் அந்தஸ்துக்கோரி நிற்கின்றன. மார்க்சிய சிந்த னைப் பாரம்பரியம் பலயீனப்பட்டு போனமையின் விளைவாகவும் இதனை நாம் விளக்கலாம்.

1994 இல் பாரிஸ் நகரில் சமூக உணர்வாள ரும் இலக்கியவாதியுமான சபாலிங்கம் கொல் லப்பட்டார். இவரைக் கொன்ற புலி கொலையா ளியான பிரகலாதன் ரத்தினவேல் (வயது31) கனடாவில் பொலிசாரிடம் பிடிபட்டபோது பாரிசி லும் லண்டனிலும் நடத்திய துவக்குச் சூடுகளை ஒப்புக்கொண்டுள்ளார். இவர் பாரிசில் சுக்காவுடன் சேர்ந்து சபாலிங்கத்தையும் லண்டனில் கனக சபை சோம்ராஜ் என்பவரையும் சுட்டதாய் தானே வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

புலிகள் தவிர வேறு எவரும் சங்கம் அமை ப்புக்கள் அரசியல் கலை இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்தமுடியாத காலம் ஒன்று இருந்தது. பத்திரி கை சஞ்சிகை வெளியிட முடியாத கொடுங்கோ ன்மை நிலவியது. ஆனால் இப்போது தமிழ் மக்கள் மத்தியில் புகலிடத்தில் சுதந்திரமான பத்திரிகைகள், சஞ்சிகைகள், தமிழ் வானொலிகள், தொலைக்காட்சிகள், அரசியல், இலக்கிய, கலா ச்சார நிகழ்ச்சிகள் நடைபெறத் தொடங்கி விட்டன. இனிப் புலிகளால் அவைகளை முன்புபோல் கட்டுப்படுத்த முடியாது தாம்வாழும் நாட்டின் மொழியோடும் பல கலாச்சாரப் போக்குகளோடும் அறிமுகமுள்ள ஒரு தலைமுறையும் இளம் சந் ததியும் உருவாகி வருகிறது. இது புலிகளின்

குறுகிய வேலிகளை புகலிட வாழ்வுக்குப் பொருத்தமற்ற தமிழ் போக்கின் கிணற்றுத் தவ ளைப் போக்கை உடைக்கத் தொடங்கிவிட்டது.

*அரசியல் கலை இலக்கிய வட்டம்*
*- ஜேர்மனி*

# உலகெங்குமுள்ள தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ களத்திலே போராடும்விடுதலைப்புலிகளே காரணம்

**-பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்.**

இன்று உலகெங்கும் வாழும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு விடுதலைப் புலிகளே காரணம் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

குருக்கள்மடம் அசிசி பாலர் பாட சாலையின் வருடாந்த விளையாட்டு விழா அருட் சகோதரர் பிரிட்டோ அலோசியன் தலைமையில் நடைபெ ற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஜோசப் பரராஜசிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில்.

இன்று இலங்கை அரசியலில் பல அதிசியங்கள் நடைபெற்று வருகி ன்றன. எது நடக்கும், எது நடக்காது என எவராலும் கூறமுடியாதுள்ள அளவிற்கு அரசியல் குழம்பிப் போயு ள்ளது. இதற்குக் காரணம் அண்மையில் கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீது இடம் பெற்ற அதிரடித்தாக்குதல் உலக நாடுகளை அதிசயத்தில் ஆழ் த்தியுள்ளது. வெளிநாடுகளின் பாதுகா ப்பு நிபுணர்கள் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

ஒரே நாளில் நடைபெற்று முடிந்த இத்தாக்குதல் இலங்கைப் பொருளா தாரத்தின் அத்திவாரத்தையே ஆட்டங் காணச் செய்துவிட்டது. இத்தனைக்கும் காரணம் என்ன?

இனப்பிரச்சினை தொடர் மாறி மாறி கடந்த 52 வருடமாக இலங்கை யை ஆண்டுவரும் ஐ.தே.க வும், ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சியும் தமிழர்களை ஏமாற்றுவதாக எண்ணிக் கொண்டு நாட்டைக் குட்டிச்சுவராக்கி வருகின்றன.

உலகிலே ஒரு சில விமான நிலை யங்களில் அதிரடித் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் மிகப் பிரபல்யமான 'என்டபே' விமானநிலை யத் தாக்குதல், இது திரைப்படமாகக் கூட வெளிவந்துள்ளது.

மூன்று ஆயுதபாணிகள் இஸ்ரேல் விமானமொன்றையும். அதில் சென்ற பயணிகளையும் கடத்திச் சென்றனர். இம் மூவரிடமும் இருந்து பயணிக ளைக் காப்பாற்ற இஸ்ரேல் நாட்டு கொமாண்டோக்கள் அதிரடித்தாக்குத லை மேற்கொண்டனர்.

ஆனால், கட்டுநாயக்கா தாக்குதல் இதனைவிட மேலானது. இலங்கை யின் அதி உச்ச பாதுகாப்பு வலயத்தி னுள்ளேயே இத்தளம் உள்ளது. மிக நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்ட இப்பாதுகாப்பு வலயத்தினுள் ஏறத்தாழ மூவாயிரம் விமானப்படையினர் கட மையில் உள்ளனர்.

இத்தகைய அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் 16 தமிழ் போராளிகள் நுழைந்து இத்தகைய சேதத்தை விளைவித்தனர் என்றால் இது போன்ற தொரு அதிரடித்தாக்குதல் எங்குமே நடைபெறவில்லை.

ஒற்றுமையின் பிரதிபலிப்பாக கள த்திலே போராடிக்கொண்டிருக்கும் விடு தலைப் புலிகளின் கரங்களைப் பலப் படுத்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கை களில் மக்கள் ஈடுபட வேண்டும்.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினை கள் தீர்க்கப்படுவதையே விடுதலைப் புலிகளும் விரும்புகின்றனர். தமிழ் மக்கள் மட்டுமன்றி சர்வதேச சமூகத் தின் விருப்பமும் இதுவே.

இதனை இந்த நாட்டின் பெரும் பான்மைக் கட்சித் தலைவர்களும் உணராது உதாசீனம் செய்யும் பட்சத் தில் நாடு பிளவுபடுவதைத் தவிர வேறு வழி கிடையாது என்றார்.

தினக்குரல்- 01-09-2001

# உதயன் சொன்னதும், சொல்லா..........

3ம் பக்கத் தொடர்ச்சி

விருப்பத்தையும் பொறுத்து 6 மில்லியனுக்கும் அதற்கு மேலும் போகிறது. இந்த வா கனம் தீர்வை இல்லாமல் அரைவாசி விலைக்கு கொள்வனவு செய்யப்பட முடியும். ஒரு ஈ கிளாஸ் மேசிடஸ் பென்ஸ் வாகனமும் அதே விலைக்குப் போகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த வாகனங்களை ஒரு மட்டுப்படுத்தப்பட்ட விலைக்கு அதாவது 3 மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத விலைக்கு பெற உள்ளார்கள். அதன்பின் அவர்கள் மாதாமாதம் 10,000 ரூபாவோ அல்லது அதற்குக் குறைவாகவோ செலுத்த வேண்டும். அவ்வாறு 5 வருடங்களுக்கு செலுத்தியபின் வாகனம் பா. உ க்கு சொந்தமாகிவிடும். அதன்பின் அவருக்கு மற்றுமொரு வாகனம் தீர்வையில்லாமல் இறக்குமதி செய்ய தக்கமை பெறுகிறார்.

மூன்று ஐ.தே.க எம். பி க்களான ரோகித பொகொல்லகம, திலக் மாரப்பன மற்றும் ஜோன்ஸ்ரன் பெர்னான்டோ ஆகியோர் புத்தம் புதிய ஈ கிளாஸ் மேசிடஸ் பென்ஸ் கார்கள் ஓடர் செய்திருக்கிறார்கள். மற்றொரு ஐ.தே.க எம்.பியான சஜித் பிரேமதாச (முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகன்) வும் ஒரு புதிய பி.எம்.டபிள்யூ- 530 ஓடர் செய்திருக்கிறார். நான்குக் கதவுகளைக் கொண்ட சலூன் மொடலான இந்த வாகனம் ஒரு டீசல் ரேர்போ இன்டர்கூலர் ஆகும். இதே ரக வாகனங்கள் மற்றுமொரு ஐ.தே.க எம்.பியான தகாம் விமலசேனவும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவரான அ. விநாயகமூர்த்தியும் ஓடர் செய்திருக்கிறார்கள்.

இந்த பி.எம்.டபிள்யூ 86,700 யூறோ டொலர்கள் பெறுமதியானவை. முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா ஒரு மொறிஸ் மைனர் காரையே வைத்திருந்தார். ஓய்வு நேரங்களில் அதனை தானே ஓட்டிச் செல்வார். ஆனால் பிரேமதாசாவின் மகன் சஜித் ஆடம்பர சொகுசு வாகனம் விரும்புகிறார். அதுவும் தனது தேர்தல் தொகுதியான அம்பாந்தோட்டையில் பவனி வருவதற்கு.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் எம்.பியான அ.விநாயகமூர்த்தி விரும்பும் புத்தம் புதிய பி.எம்.டபிள்யூ வாகனத்தை நிச்சயமாக அவர் தனது தொகுதியான யாழ்ப்பாணத்தில் செல் வீச்சுக்களால் சீரழிந்து போய் கிடக்கும் வீதிகளில் பயன்படுத்தப்போவதில்லை.

விநாயகமூர்த்தி தவிர தமிழீழ விடுதலைக் கழகம் (ரெலோ) எம்.பி ஒருவரும் சுப்பர் சொகுசு ரொயோட்டோ லான்ட் குறூயிசர் கேட்டுள்ளார்.

சண்டே லீடர்- 26-08-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்லேடன் மனிதப்பேரழிவு இந்த வரலாறு இப்படியே தொடரவேண்டுமா ?

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஒரு சில மணித்துளிகளில் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களை காவு கொண்ட தாக்குதல்கள் நியூயோர்க்கிலும், வாஷிங்டனிலும் நடத்தப்பட்டுள்ளன. எல்லோரும் இன்புற்றிருக்கவே இவ்வுலகம் என்போம். ஆனால் இங்கு மனித உயிர்கள் வெறும் பூச்சி புழுக்களுக்கு நிகராகக் கூட இல்லை.


1945 இல் ஹிரோசிமா, நாகசாக்கி ஆகிய யப்பானிய நகரங்களில் அமெரிக்கா அணுகுண்டு வீசி ஒன்றரை லட்சம் பேரின் உயிரை காவு கொண்ட சில மணித்தியாலங்களின் பின்னர் பி.பி.சி வானொலியில் ஒரு சிறு குண்டு வீசப்பட்டதாக சாவகாசமாக தெரிவிக்கப்பட்டது.

ஏறத்தாழ 50 வருடங்களின் பின்னர் அமெரிக்காவின் உலக வர்த்தக மையம் பல ஆயிரக்கணக்கானவர்களின் மரணங்களின் கற்குவியலாகியுள்ளது.

இன்று அமெரிக்காவில் நடத்தப்பட்ட தாக்குதல்களின் சகல பரிமாணங்களும் அக்கு வேறு ஆணி வேறாக காட்டப்படுகின்றன. உடனுக்குடன் தகவல்களை அறியும் தொழில் நுட்பத்தின் பிரமாண்டத்தை உணரமுடிகிறது.

எது எப்படியிருப்பினும் இத் தாக்குதல் மனித நாகரீகத்துக்கு எதிரானது. இதே போன்ற மனித குல முன்னேற்றத்திற்கு விரோதமான, சுதந்திரத்திற்கு எதிரான, உயிர்வாழ்வதற்கு எதிரான கொடிய தாக்குதல்கள் வரலாறு முழுவதும் காணப்படுகின்றன.

2ம் உலக மகா யுத்தமும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சிறிய பெரிய யுத்தங்களிலும், சமூக மாற்றத்



துக்கான போராட்டங்களிலும், இனங்களின் சுதந்திரத்திற்கான போராட்டங்களிலும், தொழிலாளர் எழுச்சிகளின் போதும் இளைய தலைமுறையினரின் அதிருப்தி வெளிப்பாடுகளின் போதும், இன வெறிக்கு எதிரான போராட்டங்களின் போதும் குரூரமிக்க பல்லாயிரம் படுகொலைகள் இந்தப் பூமிப் பந்தில் அரங்கேறியுள்ளன.

அரச பயங்கரவாதமும், தனிநபர் பயங்கரவாதமும், குரூரமான உயிர் கொல்லிகளாக உருவெடுத்துள்ளன.

இவற்றிற்கு ஒத்தாசை வழங்குவது போல் நவீன உயிர் கொல்லி ஆயுதங்களின் உற்பத்தியும், அதன் விற்பனையும், விதைப்பும் உலகம் முழுவதும் அதிகரித்துள்ளன. இவற்றின் தொழிற்பாடு மனிதர்களை மனிதத்தை அழித்தொழிப்பதே.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டுமானால் அவற்றிற்கான அடிப்படைகள் தகர்க்கப்பட வேண்டும்.

உதாரணமாக மத்திய கிழக்கில் பென்கூரியன் தலைமையில் இஸ்ரேல் உருவாக்கப்பட்டதிலிருந்து பாலஸ்தீனர்களை ஆயிரக்கணக்கில் கொன்றொழிக்கும் படலம் 50 ஆண்டுகளாக நடந்தேறி வருகிறது.

ஆத்திரம் கொண்ட பாலஸ்தீனர்கள் உலகப்படத்தில் இருந்து இஸ்ரேலை இல்லாமல் செய்ய வேண்டும் என்று சபதம் செய்தார்கள். சியோனிஸ்டுக்களோ பாலஸ்தீனர்களின் தலைநகரும் புனித நகருமான ஜெரூசலேமை கபளீகரம் செய்தார்கள்.

பாலஸ்தீனர்களின் உரிமைகள் நிலை நாட்டப்பட வேண்டும் என்று உலகமே குரல் கொடுத்த போது யாருடைய காதிலும் அது விழவில்லை. தமது செல்லப்பிள்ளையான இஸ்ரேலின் மனதை நோகடிக்காமல் பார்த்துக் கொண்டது மாத்திரமல்லாமல் முழு முனைப்புடன் தட்டிக் கொடுக்கவும் செய்தார்கள்.

உண்மையில் இந்தப் பிரச்சினை 50வருட தீராத துயரமாக தொடர்ந்திருக்க தேவையில்லை. ஆரம்பத்திலேயே அதற்குத் தீர்வு கண்டிருக்க முடியும். பலதடவை சந்தர்ப்பங்கள் கிட்டின. மத்திய கிழக்கில் பெற்றோலிய வளங்களை கட்டுப்படுத்துவதற்கு முறையான ஆள் தேவையென்பதே இங்கு முதனிலைப் படுத்தப்பட்டது.

சிறுவர்கள் இஸ்ரேலியர்களுக்கு கல்லெறிவது கூட ஆரம்பத்தில் இருக்கவில்லை. அண்மைய பத்து பதினைந்து வருடங்களாகவே இத்தகைய எழுச்சி நிலை தொடர்கிறது. இது முழு மக்களும் போராட்டத்தில் பங்கு பற்றுகிறார்கள் என்பதன் குறியீடு.

ஆனால் ஒரு காட்டுமிராண்டித்தனத்தை அவர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடியதை அமெரிக்க சி.என்.என் தொலைகாட்சி அடிக்கடி காட்டியது.

ஆனால் வரலாற்று உணர்வுள்ளவர்கள் இதனை புரிந்து கொள்ளமுடியும். சதா காலமும் காட்டு மிராண்டித்தனத்துக்கு உட்பட்ட மக்கள் தொடர்ந்து தந்தையரதும், தனையரதும், மனைவியரதும், புதல்வியரதும், கணவரதும், படுகொலைகளையும் இரத்த வெள்ளத்தையும் பார்த்தவர்கள் தம்மை இந்த நிலைக்கு ஆளாக்கியவர்கள் நெருக்கடியுறும் போது மகிழ்ச்சியடைகிறார்கள். அப்போது அமெரிக்க உலக வர்த்தக மையக் கோபுரங்களில் மரணித்த மனிதர்கள் அவர்கள் மனங்களில் மரத்துப் போயினர்.

அங்கோலாவில் அகஸ்டின் நேட்டோவின் அரசுக்கெதிராக ஜோனஸ் சவிம்பி என்றவொரு பயங்கரவாதி உருவாக்கப்பட்டார். அவர் அங்கோலாவில் நேட்டோ தலைமையில் உருவாக்கப்பட்ட மக்கள் ஜனநாயக அரசை கவிழ்ப்பதற்கு சகல விதமான நாச வேலைகளையும் மேற்கொண்டார். இன்று அங்கோலா கண்ணி வெடிகள் புதைந்த ஏழ்மையின் உறைவிடமான நாடு.

தென்னமெரிக்க நாடான சிலியில் சல்வடோர் அலன்டே தலைமையில் 70களின் முற்பகுதியில் உருவாக்கப்பட்ட மக்கள் ஜனநாயக அரசாங்கத்தை பினோச்சே என்ற சர்வாதிகாரி சதிப்புரட்சி மூலம் கவிழ்த்ததோடு அலன்டேயை படுகொலை செய்தார்.

அவர் குறுக்கு வழிகளில் பல சக்திகளின் அனுசரணையுடன் சிலியில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினார்.

அவர் சிலிநாட்டின் பிரஜைகளுக்கு எதிராக மாத்திரமல்லாமல் வேறு பல நாட்டுப் பிரஜைகளையும் படுகொலை செய்தார்.

ஆனால், அண்மைக்காலத்தில் அவன் பிரிட்டனுக்கு விஜயம் செய்த போது பிரித்தானிய அரசு அவரை கைது செய்தது. இதற்கு முன்னாள் பிரித்தானிய கன்சர்வேட்டிவ் பிரதமர் மார்கிரட் தட்சர் கூட ஆட்சேபம் தெரிவித்திருந்தார்.

தற்போது சிலிக்கு அனுப்பப்பட்டு சிலி நீதி மன்றத்தில் தண்டிக்கப்பட்டுள்ளார்.

ஈரானிய வளங்களை [illegible] மன்னர் ஷா பஹ்லவியும் பிலிப்பைன்ஸை கொள்ளையடித்த ஜனாதிபதி பேர்டினண்ட் மார்க்கோசும் இறுதியாக மக்கள் எழுச்சிகளின் போது அமெரிக்காவில்தான் தஞ்சமடைந்தார்கள்.

இவர்கள் எல்லோரும் மக்களுக்கு எதிராக குற்றமிழைத்த அரச பயங்கரவாதிகள்.

இந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நடைபெற்ற மிகப்பெரிய யுத்தம் வியட்நாம்-அமெரிக்காவிற்கு இடையில் நடைபெற்றது. இதில் வியட்நாம் மக்களுக்கு எதிராக வைரஸ் குண்டுகள் பாவிக்கப்பட்டதும், நெப்பாம் குண்டுகள் பாவிக்கப்பட்டதும் வரலாற்றில் கறை படிந்த அத்தியாயங்கள்.

ஈராக் அமெரிக்க யுத்தத்தின்போது பாதாள சுரங்கங்களில் உயிரை கையில் பிடித்துக் கொண்டு புகலிடம் தேடிய அப்பாவி ஈராக்கியர்கள் பலியிடப்பட்டார்கள்.

பல வண்ணங்களின் கலவையான இந்தியா பல இன, பல மொழி பேசும் மக்கள் இணைந்து விளங்கும் ஒரு வானவில். அந்த வான வில்லை உடைப்பதற்குத்தான் எத்தனை சதிகள் மேற்கொள்ளப்பட்டன. சீக்கியர்களின் பொற் கோயிலை ஜார்னைல் சிங்-பிந்தரன் வாலே போன்றவர்கள் நவீன ஆயுதங்களுடன் ஆக்கிரமித்தனர்.

ஹஷ்ரத்பல் பள்ளிவாசலை காஷ்மீர் அடிப்படைவாத சக்திகள் தமது சண்டை நடவடிக்கைகளுக்கான களமாய் பாவித்தன.

மக்களின் ஆன்மீகத் தேடல்களுக்கு வழிகாட்டியாக இருந்த அவர்களின மத நம்பிக்கைகளின் மீது பயங்கரவாதம் தனது முத்திரையைப் பதித்தது.




தாவூத் இப்ராஹீம் என்ற பாகிஸ்தானிய உளவாளி மும்பாயில் பல நூற்றுக் கணக்கான மனிதர்களைத் தனது குண்டுவெடி தாக்குதல்கள் மூலம் கொன்று தள்ளினான். இவன் துபாயில் சுதந்திரமாக வாழ்ந்து வருகிறான்.

பாபர் மசூதி இடிப்பு கூட ஒன்றும் தற்செயல் நிகழ்ச்சியல்ல. இந்திய சமூகத்தை பாரியளவில் பிளவுபடுத்துவதற்கான சதியின் ஓரங்கமே. பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ உளவாளிகள் கோயம்புத்தூரில் நடத்திய தாக்குதல்கள் எல்லாமே இதற்குத்தீனி போடுபவைதான். இத் தாக்குதல்களுக்கு [illegible] வளர்த்தார்கள்! வளர்க்கிறார்கள்!?



சமகாலத்தில் ஆப்கானிஸ்தானில் இருந்த ஒரு முற்போக்கான சோஷலிச எண்ணம் கொண்ட பெண்கள் உரிமைகளை மதித்த சமூக மேம்பாட்டில் அக்கறை கொண்ட ஜனாதிபதியாக நஜீப்புல்லா அவர்களை குறிப்பிடமுடியும். அவருடைய ஆட்சி தொடர்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்திருக்குமானால் அந்த நாடு நாகரீக உலகின் ஒரு பகுதியாக இருந்திருக்கும்.

கடைசியாக அடிப்படைவாதிகள் அவரையும் கொன்று ஆட்சியைப் பங்கு போட்டுக் கொண்டார்கள்.

ஆப்கானிஸ்தானில் நஜிப்புல்லா ஆட்சிக்கு எதிராக இருந்தவர்கள் சோவியத் படையின் பிரசன்னத்துக்கு எதிராக இருந்தவர்கள் நம் இடது சாரிகளில் ஒரு பிரிவினரும் அடக்கம்.

தற்போது எத்தகைய ஆப்கானிஸ்தான் மிஞ்சியிருக்கிறது. அங்கு உணவுக்கு கோதுமை இருக்கிறதோ இல்லையோ கொல்வதற்கு குண்டுகள் கிடைக்கும். கண்ணிவெடிகள் கிடைக்கும். மனித சடலங்கள் கிடைக்கும்.

இந்துகுஷ் பள்ளதாக்கின் பெரும் நாகரீகத்தின் தொட்டிலான கலாச்சார செழுமைமிகு ஆப்கான் இன்று பூமிப் பந்தில் பாழ்பட்ட நிலம். அந்த நிலத்தில் உயிர்கொல்லி ஆயுதங்கள் இறைந்து கிடக்கின்றன. பாகிஸ்தானுக்கு கிடைக்கும் ஆயுதங்களை குவிக்கும் கொல்லைபுறமாகவே இந்த நாடு மாற்றப்பட்டுள்ளது.

அங்கே பெண்கள் வீட்டைவிட்டு வெளிவரக்கூடாது. அவர்கள் முழுவதும் தம்மை மூடிக்கொள்ள வேண்டும் இல்லாவிட்டால் சவுக்கடி என்ற மனித நேயத்திற்குப் புறம்பான விரோதக் கொடுமைகள் நடைபெறுகின்றன.

இந்த ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் பயங்கரவாதத்தின் கூட்டுக் குழந்தைதான் காஷ்மீரி பெண்கள் கட்டாயம் பர்தா அணிய வேண்டும். இல்லாவிட்டால் முகத்தில் அசிட் அடி என்று வெளிப்பட்டிருக்கும் கோஷ்டிகள். இப்போது பர்தா அணியாதவர்களைத் துப்பாக்கி பிரயோகம் செய்வோம் என அறிவித்துள்ளன. இவர்களை எல்லாம் பிரசவித்தது யார்? ஏற்கனவே குறிப்பிட்டது போல் மத அடிப்படைவாதங்களில் நவீன பயங்கரவாதத்தை கலந்து புது மெருகூட்டியவர்கள் யார்? இந்த பின் லேடன் ஒன்றும் விதிவிலக்கானவரல்ல. ஒரு காலத்தில் சி.ஐ.ஏ யால் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறாராம். சவூதி அரேபியாவின் கோடீஷ்வர ஷேக்கான இவர் ஒரு காலத்தில் வெள்ளை மாளிகைவரை சென்று வந்திருக்கிறாராம்.

பயங்கரவாதம் உருவாகுவதற்கான காரணிகள் முதலில் இல்லாதொழிக்



கப்படல் வேண்டும். பயங்கரவாதத்திற்கும் மக்களின் சுதந்திரமான எழுச்சிக்கும் இடையே திட்டவட்டமான எல்லைக்கோடு வரையப்பட வேண்டும்.

தனிநபர் பயங்கரவாதம் என்றாலும் சரி, அரச பயங்கரவாதம் என்றாலும் சரி அவை மனித குலத்திற்கு எதிரானவை. அவற்றிற்கு உதாரணமாக இஸ்ரேலின் நடவடிக்கைகளையும், பின்லேடனின் செயற்பாடுகளையும் உதாரணமாகக் கொள்ளமுடியும்.

இந்தப் பயங்கரவாதம் தனது வரலாற்றில் ஒரு படிமுறையான வளர்ச்சியை பெற்று வந்திருக்கின்றது: கொங்கோவின் சமூக ஜனநாயக அரசியல் தலைவர் பற்றிக் லுமும்பாவோ, பொலிவியாவில் சேகுவேராவோ தற்செயலாக இறக்கவில்லை. மனித குலத்தின் சார்பான இவர்களை மனித குலத்தின் விரோதிகள் படுகொலை செய்தார்கள்.

அதேபோலத்தான் கடந்த ஆயிரம் ஆண்டுகளின் தலை சிறந்த பெண்மணியாக உலகளாவிய ரீதியில்தெரிவு செய்யப்பட்ட இந்திராகாந்தி அவர்களின் படுகொலையும், இந்தியாவின் புதிய இளம் நம்பிக்கையாக திகழ்ந்த ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலையும் இந்த படுகொலைகளுக்காகவெல்லாம் மறைகரங்களால் வன்முறைச் சக்திகள் ஊக்குவிக்கப்பட்டார்கள்.

இந்தியாவில் ஸ்திரமற்ற ஒரு அரசியல் நிலையை தோற்றுவிப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

ஹிட்லரின் கொலை யுகத்துடனும் அமெரிக்காவின் அணு குண்டு வீச்சுடனும் மக்களின் பிரமாண்டமான தொகையினரின் அழிவு முடிவுக்கு வந்துவிடவில்லை. இந்த 55 ஆண்டுகளில் எண்ணுக்கணக்கற்ற மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

காலத்தின் முள் தற்போது சுற்றி வந்து நியூயோர்க்கில் நின்று கொண்டிருக்கிறது. இந்த மரண ஓலங்கள் மானிட நெஞ்சங் கொண்டவர்களை பெருந்துயர் கொள்ள வைப்பவையாகும்.

உலகத்தில் எத்தனை ஆயிரம் மனித உரிமை இயக்கங்கள், ஜனநாயக ஆர்வலர் அமைப்புக்கள் இருக்கின்றன. எத்தனை சிறுவர் உரிமை, பெண்ணுரிமை அமைப்புக்கள் இருக்கின்றன.

தொடர்ச்சி 7ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை பிரகடனங்களும் பெண்களும்

**1948** டிசம்பர் 10ம் திகதி ஐக்கியநாடுகள் பொதுச்சபையில் உலகெங்கும் வசிக்கும் எல்லா மனிதர்களுக்கும் உரித்தான அடிப்படை உரிமை பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த மனித உரிமைகள் பொதுவாக மேற்கத்தைய நாடுகளின் சமூக, பொருளாதார நிலைமைகளில் மீறப்படும் தனிப்பட்ட உரிமைகள், போர்க்காலங்களில் அரசுகளினால் மீறப்படும் உரிமைகள் என்பனவற்றை தவிர்ப்பதற்கான வடிவமாகவே காணப்படுகிறது.

உண்மையில் நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ சமூக மாற்றங்களில் பெண்ணிற்கு எவ்வாறு சட்டவாக்கங்களில் அவர்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக தீர்வுகள் வைக்கப்படவில்லையோ அவ்வாறே 2ம் உலக மகா யுத்தத்தின் பின்னைய காலகட்டத்தில் போருக்கு பின் மனித உரிமைகள் பேணப்பட வேண்டும் என்று உலகளாவிய ரீதியில் சிந்தனைகள் துளிர்விட்டபோதும் அது பெண்களைப் பாதிக்கும் உரிமை விடயங்களை பெண்களின் பார்வையில் பார்க்காது ஆக்கப்பட்ட மனித உரிமை பிரகடனமாக காணப்படுகின்றது.

உதாரணமாக சிவில், அரசியல் உரிமைகளில் (Civil & Political Rights)



சிறைக்கைதிகள் எவ்வாறு நடாத்தப்பட வேண்டும் என்பதில் "சித்திரவதை" என்பதன் கீழ் பாலியல் பலாத்காரம் ஒரு சித்திரவதையாக அப்போது கருதப்படவில்லை. இது மிக அண்மையில் அதாவது 1998ல் சர்வதேச நீதி மன்றத்தில் முன்வைக்கப்பட்ட வழக்கில் பாலியல் பலாத்காரம் சித்திரவதையாகும் என்று தீர்க்கப்பட்ட பின்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உயிர் வாழ்வதற்கான உரிமைகள் (Rights for Lifes Dignity) என்ற பகுதியில் பெண்ணாக இருப்பதால் ஏற்படும் உயிர்ப்பாதுகாப்பின்மையையும் அதற்கு எந்த வகையில் பெண் சட்ட ரீதியான பாதுகாப்பை பெற முடியும் என்பதும் குறிப்பிடப்படவில்லை.

சுதந்திரத்துக்கும் பாதுகாப்பிற்குமான உரிமைகள் (Rights for liberty & Security) என்ற பிரகடனத்தில் இது அரசுகளினால் ஏற்படும் மனித உரிமை மீறல்களை கணக்கில் எடுத்துக் கொள்கிறதேயல்லாமல் பாலியல் ரீதியான வன்முறைகளை கருத்தில் கொள்ளவில்லை.

கருத்து சுதந்திரத்துக்கான உரிமைகள் (Rights for freedom of Expression) என்பது இந் நாடுகளிலும் பெண்களை விலைப்படுத்தும் பாலியல் படங்களை வெளியிடுவதற்கான சுதந்திரமாக கருதுகிறது. உண்மையில் இது பெண்களிற்கு எதிரான வன்முறையாகும்.

தனித்துவத்துக்கான உரிமைகள் (Rights for Privacey) என்பதன் கீழ் குடும்பம், வீடு என்பது மனிதனின் தனிப்பட்ட பிரத்தியேக உரிமையாக கருதுகிறதே தவிர, குடும்ப அமைப்புக்குள் குடும்பம் என்ற போர்வையில் பெண்கள் அடக்கி ஒடுக்கப்படும் நிலையினை கவனிக்க தவறுகிறது.



முன்னேற்றத்துக்கான உரிமைகள் (Rights for Development) என்பது ஆணாதிக்க சமூகத்தினை முன்னேற்றுவதற்கான உரிமையாக பார்க்கப்படுகிறதே தவிர, பொருளாதார ரீதியில் சமனற்ற நிலையிலிருக்கும் பெண்களின் நிலையினை மாற்றுவதற்கான அடிப்படையில் ஆக்கப்படவில்லை.

சுயநிர்ணய உரிமைகளில் (Rights to self determination) உரிமைப் போராட்டத்திற்கானதாக கருதப்படுகிறதே தவிர. அப் போராட்ட அமைப்புக்களுக்குள் காணப்படும் ஆண் மேலாதிக்கம், பெண்களின் இரண்டாம்பட்ச நிலையினையும் கவனிக்க தவறுகிறது.

1979 இன் பின் அதாவது கிட்டத்தட்ட மனித உரிமை பிரகடனம் ஆக்கப்பட்டு அரை நூற்றாண்டின் பின் பெண்கள் பேராயம் (Convention for Women) அறிமுகப்படுத்தப்பட்ட போதும் இது எல்லா பெண்களும் ஒரே விதமான அனுபவம், வாழ்நிலை, கலாச்சாரம் கொண்டவர்களாக கருதுகிறது. உண்மையில் அவர்களுக்கிடையில் காணப்படும் வர்க்க, இன, பொருளாதார, பாலியல் வேறுபாடுகளை கருதவில்லை.

இவை மேலும் பெண்ணிற்கு வெளி விவகாரங்களில் சமூகத்தில் மீறப்படும் உரிமைகளை பாதுகாப்பதாக காணப்படுகிறதே தவிர குடும்பம் என்ற வட்டத்துள் ஏற்படும் உரிமை மீறல்களிற்கு நிவாரணத்தை வழங்கவில்லை.

இந்த மாதிரியான நிலைமையை மாற்றுவதற்கு பெண்நிலைவாதிகள் "பெண்களிற்கான மனித உரிமைகள்" தனியாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்று கோருகிறார்கள். இது மட்டுமே பொதுவாக மனித இனமாக பெண்களை பார்க்காது பெண் என்ற அடிப்படையில் காலங்காலமாக ஒடுக்கப்பட்டிருக்கும் பெண்ணினத்தினை அவர்களின் சமனற்ற நிலையிலிருந்து முன்னேற்றவும் சமூக, அரசியல் ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கும் பெண்களின் நிலையினை உலகிற்கு எடுத்து காட்டுவதற்கான ஒரே தீர்வாக இருக்கும் என்று முன் வைக்கிறார்கள். தற்போது சச்சரவை கிளப்பியிருக்கும் அரசியலமைப்பு மாற்றத்திலும் பெண்களினால் தலைமை தாங்கப்படும் அரசியல் கட்சிகளாயினும் சரி அல்லது பெண்களின் உரிமையினை மதிப்பதாக கூறிக்கொள்ளும் அரசியல் கட்சிகளாயினும் சரி இந்த மாற்றத்தில் பெண்ணின் நிலைமை அல்லது உரிமை என்ற விடயத்திலும் ஏதேனும் முன்னேற்றம் ஏற்படுகிறதா என்பதை கவனிக்க தவறவிட்டமையும் பெண்கள் உள்ளுர் சட்டவாக்கங்களிலும், சர்வதேச பிரகடனங்களிலும் விழிப்பாக இருக்க வேண்டிய நிலைமையினையும் உணர்த்தி நிற்கின்றன.

**நியூசிலாந்திலிருந்து-அபி**

# பின்லேடன் மனிதப்.........

எத்தனை முற்போக்கு தாராளவாத அரசியல் இயக்கங்கள் இருக்கின் றன. நாடுகள் இருக்கின்றன. ஆனா லும் ஏற்றத்தாழ்வுகளோ, ஒடுக்கு முறை களோ, இனம், மதம், அதிகாரம் இவ ற்றின் பெயரிலான உயிர்அழிப்புக்கள் அதிகரித்துதானே இருக்கின்றன.

பழிவாங்கலில் திருப்தியடையும் போதை உச்ச நிலையை அடைந்திரு க்கின்றது. அது மாற்றான் மீது நடத் தப்பட்டாலென்ன சாதாரண மக்கள் மீது நடத்தப்பட்டாலென்ன எதிரி தோ ற்றுவிட்டான் என்று தம்மைத்தாமே தேற்றிக் கொள்கிறார்கள்.

உண்மையான சுதந்திரப் போராட் டங்கள் யாவும் மானிட நோக்கங்கள் நிரம்பியிருந்தன என்றே கருதுகிறேன்.

முதலாம் உலகமகா யுத்தம் முடி வுறும் நிலையில் ரஷ்யா எழுச்சி பெற்று சோவியத் சோசலிஷ குடியரசு உருவாகியது. 70ஆண்டுகள் கம்பீரமாக நின்றிருந்த சோவியத் ஆட்சி 90களில் வீழ்ச்சியுற்றது.

2ம் உலகமகா யுத்தத்தின் பின் னர் உருவாகிய கிழக்கு ஐரோப்பிய சோஷலிச நாடுகளும் 90களில் நலி வடைந்தன.

உலகச் சமநிலையில் ஏற்பட்ட இந்த குழப்பமும்தான் இன்று உலகு தழுவிய அளவில் உருவாகி இருக் கும் அராஜகத்திற்கு ஒரு முக்கிய காரணம்.

சீனப் புரட்சியும் மாபெரும் மக்கள் எழுச்சியாகவே நடைபெற்றது. இந்தி யா பல்வேறு மொழிபேசும் மக்களை யும் ஒன்றிணைத்து தமக்கே உரிய வழியில் சுதந்திர போராட்டத்தை நடத்தியது.

கியூபா புரட்சியாளர்களும் மக்களை அணிதிரட்டியே போராட்டம் நடத்தினார் கள். உலகின் சோசலிஷ முகாம் அவர்களின் பின்னால் நின்றது. வங் கதேச விடுதலையும் அவ்வாறுதான். 70களின் இறுதிப் பகுதியில் ஈரானிய எழுச்சியும் விவசாயிகளதும், சிற்று டைமையாளர்களதும் எழுச்சியே.

அதில் மக்கள்தான் தீர்மானகரமான சக்திகள். சமகாலத்தில் மியன்மாரில் ஜனநாயகத்துக்கான இயக்கமும் 50 வருடங்களுக்கு மேலாக நடைபெறும் பாலஸ்தீனர்களின் போராட்டமும் நேர்த்தியான மக்கள் எழுச்சிகளே.

ஆனால் நம் காலத்தில் சில போ ராட்டங்களுடன் தன்னை தொடர்பு பட்டதாக காட்டி தனிநபர் பயங்கர வாதம் ஆள்மாறாட்டம் செய்கிறது. அரச பயங்கரவாதத்தைப்போல இது வும் மனித குலத்திற்கு எதிரானதாகும்.

பயங்கரவாதம் அது எந்த வகைப் பட்டதாயினும் சரி அகன்ற சுடுகாடுக ளைத்தான் உருவாக்கியிருக்கிறது. அவை மக்கள் வாழ முடியாத இடிபாடு கள் நிறைந்த கண்ணி வெடி புதைந்த நரகங்களாகும்.

அவ்வாறு மாற்றப்பட்ட பல பூமிகள் ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் மிக அதிகமாகவே காணப்படுகின்றன.

தற்போது கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் ஏற்பட்டதைவிட இரண் டாம் உலகமகாயுத்த அனுபவங்க ளைவிட மோசமான ஒரு பொருளாதார மந்தநிலை உலகளாவிய நிலையில் ஏற்பட்டுள்ளது. இது பாரிய யுத்தத்தி ற்கு இட்டுச் செல்லும் சாத்தியப்பாட் டையும் மறுத்துவிட முடியாது.

இதற்கான உடனடி நிலைமைக ளை யாரோ ஒரு முட்டாளோ அல்லது சில முட்டாள்களோ தோற்றுவிக்க முடியும். அத்தகையவொருநிலை தற் போது தோன்றியுள்ளதா என்று ஐயுற வேண்டியிருக்கிறது.

தற்போது தோன்றியுள்ள பொரு ளாதார நெருக்கடி அப்படியான[illegible] லும் குணாம்சரீதியில் பல அம்சங்க ளில் வேறுபட்டிருக்கிறது.

6ம் பக்கத் தொடர்ச்சி

தற்போது உலகைப் பல தடவை அழிக்கக்கூடிய ஆயுதங்கள் குவிந்து போய் கிடக்கின்றன. அந்தத் தொழில் நுட்பங்கள் அரசுகளிடம் மாத்திரமல்ல தனிப்பட்ட குழுக்களிடமும் சென்ற டைந்துள்ளன.

எலக்றோனிக் தொழில் நுட்பம் கொண்ட சிறுரக ஆயுதங்கள் கூட இறைந்து கிடக்கின்றன. எனவே மூன்றாவது உலகயுத்தம் என்பது புவிக்கோளின் மனித குலத்தின் ஒரு பகுதியையே காவு கொண்டு விடலாம். எனவே நிதானம் தேவை.

அமெரிக்க இரட்டை கோபுர அடு க்குமாடித் தொடர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை கண்டித்த பிடல் கஸ்ட் ரோ அவர்களும் இந்த அபாயத்தை சுட்டி காட்டியுள்ளார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தின் தலைவர் யாசீர்அரபாத், அஷ்ரவி ஹனான் போன்ற தலைவர்களும் மிகத் திட்டவட்டமாகவும் வன்மையா கவும் இத்தாக்குதலை கண்டித்துள் ளார்கள்.

ஜேர்மன் அதிபர் மனிதர்களின் இணைந்து வாழ்வதற்கு எதிரான தாக் குதல் என்று கண்டித்துள்ளார்.

லிபிய அதிபர் கேர்ணல் கடாபி கசப்பான அனுபவங்கள் இருப்பினும் இந்த மனிதாபிமானமற்ற தாக்குதலை யிட்டு விசனித்துள்ளார்.

எனவே இனிமேலும் இத்தகைய நிலவரங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்று நவீன உலகத்தின் மனிதர்கள் என்ற வகை யில் நாம் தீர்மானிக்க வேண்டியவர்க ளாக உள்ளோம்.

[illegible] விதைக்கப்பட்டதால் பயங்கரவாதம் என்ற மனித குலத்தை அரித்துத் தின்னும் போதைச்செடி வளர்ந்து விருட்சமாகியுள்ளது.

பிரபஞ்சத்தில் ஜீவராசிகள் இல் லாத கிரகங்கள்தான் அதிகம் என்று நம்பப்படுகிறது. மனிதர்கள் இருப்பது இப் புவியில் மட்டும்தான். ஆனால் இங்கு மனிதர்கள் உயிருடன் எரியூட் டப்படுகிறார்கள். அது இயற்கை அழி வுகள் அதனால் ஏற்பட்ட காலநிலை களின் மாற்றங்களால் மாத்திரம் ஏற் பட்டவையல்ல. பிரபஞ்சத்திலேயே அரிதான மானிடப் பிறவி இங்கு மிரு கக் குணம் கொண்ட மனிதர்களால் விறகாக எரிக்கப்படுகிறது. ஆகாயத்தில் எழும்பும் புகைமண்டலங்களில் எரியு ண்ட மனித தசைகளினதும், எலும் புகளினதும் நெடியே அதிகமாகக் காணப்படுகிறது. இதற்காகவா இந்த மகத்தான பிறப்பை அடைந்தோம் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

காலம் கடந்தாவது ஞானம் வர வேண்டும்.

புதிய உலக ஒழுங்கு என்கிறார்கள். அது வசதியானவர்களுக்கும் மனித குலத்தின் சிறுபான்மை எண்ணிக்கை யானவர்களுக்கும் என்று இல்லாமல் ஒரு சமத்துவம் ஏற்படுத்தப்பட வேண் டும்.

இனங்களின், நாடுகளின் சுதந்திர த்திற்கான வேட்கை புரிந்து கொள் ளப்பட வேண்டும். ஒரு பகுதி வாழ இன்னொரு பகுதி வறுமையில் உழல வேண்டும் என்ற விதி மாற்றப்பட வேண்டும். இனியொரு விதி செய்யப் பட வேண்டும்.

ஜேர்மன் அதிபர் Coexcistan சக வாழ்வு என்று எதனை கூறியுள்ளாரோ எனக்குத் தெரியாது. ஆனால் உண் மையான சக வாழ்வு வேண்டும்.

உலகில் ஆயுதங்களுக்காக செலவிடப்படும் பணம் யுத்தங்களுக் காக செலவிடப்படும் பணம் வறிய குழந்தைகளின் போஷாக்கிற்காகவும், [illegible]றிவில்லாத உலக சமுதாயத்தின் கல்வி கண்ணைத் திறத்தல் போன்ற இன்னோரன்ன பணிகளுக்கும் பயன் படுத்தப்பட வேண்டும்.

உலகத் தலைவர்கள் எனப்படு வோரும் நாடுகளின் மக்களும் ஏற்றத் தாழ்வான இந்த விஷச்சூழல் வட்டத் தை கொஞ்சமேனும் உடைக்க முடி யுமா என சிந்திக்க வேண்டும்.

அவ்வாறு சிந்திக்காவிட்டால் அழிவு எல்லோருடைய எல்லைகளுக்குள்ளும் தான் வரும்.

பின் செய்ய வேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அறியா மை, வன்மம், குரோதம் போன்ற குறு கிய நிலைகளில் இருந்து மனித குலத்தை விடுவிக்க போராட வேண் டும். இதுவே இன்றைய கடமை.

ஏனெனில் நுகர்வு அதிகமானதால் உலகின் வளங்கள் பற்றாக்குறையாகி விட்டன. வேறு கிரகங்களை தேட வேண்டிய நிலை.

இந்த நிலையில் சகவாழ்வு என்பது வளங்களை சரியாக பகிர்ந்து கொள் வதிலேயே இருக்கின்றது.

இதற்கு மேலாக அவை அழிக் கப்படுவதென்பது மனித குலத்திற்குச் செய்யும் மாபெரும் துரோகமாகும். இதனைத்தான் பின்லேடன் போன்ற வர்கள் செய்கிறார்கள்.

இதனை அனுமதிக்க முடியாத அதேவேளை உலகம் தொடர்பாக மறுசிந்தனை செய்ய வேண்டிய நே ரம் வந்துவிட்டதென்றே கருத வேண் டும்.

காட்டுமிராண்டித்தனங்களையும். அதிகார அகங்காரங்களையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு முன் செல்ல முயற்சிக்க வேண்டும்.

சமகாலத்தில் பொறுப்பு வாய்ந்த பிரஜைகள் செய்யக்கூடிய கடமை அதுவே.

இல்லாமல் இத்தகைய தாக்குதல் களை பார்த்து வியப்புற்றிருப்பது காட்டு மிராண்டிப் பண்பாடாகும்.

**-பாரி-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபு அலி முஸ்தாபா படுகொலை

பாலஸ்தீன விடுதலைக்கான பிரபல்ய முன்னணி (PFLP) யின் தலைவரும் செயலாளர் நாயகமும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மிக முக்கிய தலைவர்களில் ஒருவருமான அபு அலி முஸ்தாபா என்றழைக்கப்படும் முஸ்தாபா சிப்ரி 27-08-2001 காலை 11.15 மணியளவில் றமலா நகரில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார்.

*சியோனிஸ்டுகளின் சதி*

வசதியான நடுத்தர வர்க்கத்தவர் வாழும் குடிமனைப் பகுதியில் பி.எப்.எல்.பி யின் அலுவலகம் அமைந்துள்ளது. அப்பகுதியில் தாளப்பறந்த இரண்டு ஹெலிகொப்டர்களிலிருந்து துல்லியமாக ஏவப்பட்ட ஏவுகணைகள் இரண்டு யன்னல்கள் வழியே புகுந்து வெடித்தன. கட்டிடத் தொகுதியான ஏனைய பகுதிகளில் வெடிச்சத்தம் தவிர்ந்த ஒரு அசுமாத்தமுமே தெரியவில்லையாம். யாசீர் அரபாத்தின் அலுவலகமும் நகரின் அப்பகுதியிலேயே அமைந்துள்ளது. செய்மதிகளினது உதவியுடன் அனைத்துப் பாலஸ்தீனத் தலைவர்களையும் இஸ்ரேல் தொடர்ச்சியான கண்காணிப்பிலேயே வைத்திருக்கின்றது.

அபு அலி முஸ்தாபா தற்பாதுகாப்பிற்காக வெவ்வேறு வாகனங்களில் பயணித்தல், வெவ்வேறு பாதைகளுடாக பயணம் செய்தல், வாகனங்களை மாற்றிக் கொள்ளுதல் என்று பல முன்னெச்சரிக்கைகளை மேற்கொண்டிருந்த போதும் இஸ்ரேலிய பயங்கரவாதம் வெற்றி கொண்டுவிட்டது.

**பாலஸ்தீனத்தின் மேற்கு ஆற்றங்கரைப் பிரதேசம் மற்றும் காசா பகுதிகளில் ~இன்ரிபாடா, (intifada) என அழைக்கப்படும் உள்நாட்டுக் கலகம் இஸ்ரேல் அரசிற்கு இன்றுவரை ஒரு பெரும் தலையிடியாக இருக்கின்றது. இதை ஒழித்துக்கட்டும் முயற்சியாக இஸ்ரேல் பின்பற்றிவரும் தலைவர்களைப் படுகொலை செய்யும் அணுகு முறையின் விளைவாக இதுவரை 40 பாலஸ்தீன தலைவர்கள் ஆங்காங்கு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.**

**எனினும் 1988ம் ஆண்டு ரியூனிஸ் நகரினுள் புகுந்த இஸ்ரேலிய கமாண்டோப் படைப்பிரிவினரால் படுகொலைசெய்யப்பட்ட யாசீர் அரபாத்தின் தளபதியும் வலதுகரமுமாக விளங்கிய அபு ஜிகாத்திற்குப் பின்னர் படுகொலை செய்யப்பட்ட மிக முக்கிய பாலஸ்தீனத்தலைவர் அபு அலி முஸ்தாபாதான். இவரது படுகொலை கட்சி பேதமின்றி அனைத்துப் பாலஸ்தீனத் தரப்பினர் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் தோற்றுவித்துள்ளது.**

அபு அலி முஸ்தாபாவினது பூதவுடல் றமலா நகரசபை மண்டபத்தில் இறுதி மரியாதைக்காக வைக்கப்பட்டதும் அல்பற்றா, டி.பி.எல்.எப், ஹமாஸ் ஆகிய ஸ்தாபனங்களின் முக்கிய தலைவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தியமையும் பாலஸ்தீன தலைமையில் இவர் வகித்த பங்கைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

*பி.எப்.எல்.பி (PFLP) யின் தலைவர்*

63 வயதான அலி முஸ்தாபா கடந்த வருடம் யூலை மாதம் நோய்வாய்ப்பட்டிருக்கும் பி.எப்.எல்.பி யின் ஸ்தாபகத் தலைவரான டாக்டர் ஜோர்ஜ் ஹபாசிடமிருந்து தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

1938ம் ஆண்டு மேற்கு ஆற்றங்கரை பிரதேசத்திலுள்ள அரபா (Arabeh) நகரில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த அபு அலி முஸ்தாபா, 1948 முதல் ஜோர்தான் மன்னரின் கட்டுப்பாட்டில் உள்ள "சுதந்திர பாலஸ்தீனம்" என அழைக்கப்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்து வந்தார். 1957ல் 19 வயதான அலி முஸ்தாபா சுதந்திர பாலஸ்தீனத்தில் டாக்டர் ஹபாசின் அப்போதைய அரபு தேசியவாத இயக்கத்தின் உறுப்பினராக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

10 வருடங்களின் பின் 1967ல் டாக்டர் ஹபாசுடன் இணைந்து பி.எப்.எல்.பி யைத் தோற்றுவித்தார். பாலஸ்தீன அகதிகளின் முக்கிய குரலாக ஒலித்து வந்த அலி முஸ்தாபா 32 வருட அகதி வாழ்க்கைக்குப் பின்னர் செப்டம்பர் மாதம் 1999ம் ஆண்டு இஸ்ரேலில் மேற்கு ஆற்றங்கரைப் பிரதேசத்திற்குத் திரும்பினார். அப்போதுதான் நோய்வாய்ப்பட்டிருக்கும் தனது தாயாரை முதன் முதலில் 32 வருடங்களின் பின் பார்த்தார். தனது தந்தையின் சிதைக்கும் என்று அஞ்சலி செலுத்தினார்.

**சாதாரண குடும்பப் பின்னணியும் பாலஸ்தீன அகதிகளுடன் வாழ்வின் பெரும் பகுதியை பகிர்ந்து கொண்ட அனுபவமும் தீட்சண்யமான ஆய்வுத் திறனும் மக்கள் போராட்டங்களை நெறிப்படுத்தும் ஆற்றலும் அலி முஸ்தாபா ஆற்றிய சொற்பொழிவுகளுமே மக்களை வெஞ்சினம் கொண்டு வீதிக்கு வரவழைத்ததுடன் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் ஈற்றில் இஸ்ரேல் அமெரிக்காவின் அனுசரனையுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டி ஏற்பட்டதும் வரலாற்றுப் பதிவுகளாகிவிட்டன.**

பி.எப்.எல்.பி. யினால் ஆரம்பிக்கப்பட்ட இன்ரிபாடா தலைமை வெகுவிரைவில் மேற்கு ஆற்றங்கரைப் பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த அடிப்படைவாதிகளான ஹமாசினதும், யாசீர் அரபாத்தினது அல்பற்றா இயக்கத்தினதும் கைக்கு மாறியமையையும் பி.எப்.எல்.பி ஓரங்கட்டப்பட்டமையையும் சுருக்கமாகக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

பாலஸ்தீனப் போராட்டத்தில் 1967ம் ஆண்டு ஆறு நாள் யுத்தம் ஒரு மைல் கல்லாகும். இந்த யுத்தத்தின் விளைவாக பாலஸ்தீனத்தின் பெரும் பகுதியை இஸ்ரேல் தன்னுடன் இணைத்துக் கொண்டபோது, அப் பகுதியில் உள்ள பிற்போக்கு அரபு ஆட்சியாளர்கள் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பாலஸ்தீனர்களின் கோரிக்கைகளை கிடப்பில் போட தயக்கமின்றி முன்வந்தனர்.

இந்தப் பின்னணியில் யாசீர் அரபாத்தின் தலைமையிலான அல்பற்றா இயக்கம் முதலில் மேற்குக் கரை பிரதேசத்தில் கலகங்களை உண்டு பண்ணி இஸ்ரேலை வெளியேற்றலாம் என முயற்சித்து தோல்வி கண்டது. இதன் பின்னர் வேறு வழியின்றி [illegible] வைக்கப்பட்டிருந்த PLO என்ற ஸ்தாபனத்தை நிர்வாக ரீதியில் கைப்பற்றி ஏனைய பாலஸ்தீன இயக்கங்களுக்கும் அந்த ஸ்தாபனத்தில் இடங்கள் ஒதுக்கி, இன்று வரை PLO ஊடாகவே அல்பற்றா செயற்பட்டு வருகின்றது.

மேற்கூறிய காலகட்டத்தில் டாக்டர் ஹபாஸ், அலி முஸ்தாபாவைத் தலைமையாகக் கொண்ட பி.எப்.எல்.பி அன்றைய சூழலுக்கு ஏற்ப வித்தியாசமான பார்வை ஒன்றை வெளிப்படுத்தியது. பிற்போக்கு அரபுத் தலைமைகளுடனும் இணக்கம் காண்பது பாலஸ்தீன சுதந்திரத்தையும் பெற்றுத் தராது என்றும் மாறாக பிற்போக்கு அரபு அரசுகளை நிலைப்படுத்தவும் மேற்குலகின் முதலாளித்துவம் நிலையாக மத்திய கிழக்கில் காலூன்றவுமே வழிவகுக்கும் என்றும் மேற்குலக முதலாளித்துவத்தின் கைப்பொம்மையான இஸ்ரேலை அப்புறப்படுத்துதல் என்பது மத்திய கிழக்கில் ஜனநாயக மக்கள் ஆட்சிகளைத் தோற்றுவிப்பதற்கான வழி முறை என்றும் தனது பார்வையை வெளிப்படுத்தியது.

1999ம் ஆண்டு செப்டம்பர் மாதம் யாசீர் அரபாத்திற்கும் இஸ்ரேலிய பிரதமர் எகுட் பராக்கிற்கும் இடையே ஏற்பட்ட இணக்கத்தின் விளைவாகவே அலி முஸ்தாபா மேற்கு ஆற்றங்கரைக்குத் திரும்புவதைத் தீர்மானித்தார். அப்போது பி.எப்.எல்.பி இஸ்ரேல் அரசுடன் சமரசம் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டதா என்ற ஆச்சரியமும், அதிருப்தியும் பலர் மத்தியில் எழாமல் இல்லை.

ஆனால் பி.எப்.எல்.பி யினால் 87ல் ஆரம்பித்து வைக்கப்பட்ட இன்ரிபாடா (உள்ளூர் கலகம்) வின் தலைமை, ஹமாஸ் அடிப்படைவாதிகள், அல்பற்றாவினது கைக்கு மாறியமையும் பி.எப்.எல்.பி படிப்படியாக ஓரங்கட்டப்படும் நிலையை மாற்றிடவும், மாற்று வழிகளை கையாளவுமே அலி முஸ்தாபா மேற்கு ஆற்றங்கரை பிரதேசத்திற்குத் திரும்பினார் என்று நம்பப்படுகிறது.

*ஜனநாயக பாலஸ்தீன கனவு*

நாடு திரும்பிய பின்னர் அவர் அளித்த செவ்விகளில் இஸ்ரேல் அரசு ஒரு சட்ட விரோத அரசு என்றும் மத்திய தரைக் கடலிலிருந்து ஜோர்தான் ஆறு வரையான பிரதேசத்தில் ஒரு ஜனநாயகப் பாலஸ்தீனத்தை நிறுவியே தீருவோம் என்றும் சூளுரைத்திருந்தார்.

அத்துடன் கெய்ரோவிலிருந்து வெளிவரும் பிரபல அரபுப் பத்திரிகையான "அல் அஹ்ராமிற்கு" அளித்த பேட்டியில் 40 இலட்சம் பாலஸ்தீன அகதிகள் பாலஸ்தீனம் திரும்ப ஏற்பாடு செய்யப்படல் வேண்டும் என்ற கோரிக்கை இன்றைய காலகட்டத்தில் பாலஸ்தீன மக்களின் முதன்மையான கோரிக்கையாக இருத்தல் வேண்டும் என்ற வியூகத்தை பி.எல்.ஓ வில் முன்மொழிந்தமையையும், இது பி.எல்.ஓ வினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 2000ம் ஆண்டு அமெரிக்கா காம்ப் டேவிட்டில் நடந்த இஸ்ரேல் - பாலஸ்தீன சந்திப்பில் இக்கோரிக்கை உத்தியோக பூர்வமாக முன்வைக்கப்பட்டமையும் அலி முஸ்தாபாவின் தலைமையிலான பி.எப்.எல்.பி பாலஸ்தீனப் போராட்டத்தை முக்கிய காலகட்டங்களில் தொய்வு நிலையிலிருந்து எழுச்சி நிலைக்கு மாற்றும் நெறிப்படுத்தல்களை மேற்கொண்டு வருவதையும் காட்டி நிற்கின்றது.

அலி முஸ்தாபா இஸ்ரேலியப் பயங்கரவாதத்தினால் ஒழித்துக் கட்டப்படுவதற்கும் பி.எப்.எல்.பி யின் சுதந்திரமான பங்களிப்பும், அலி முஸ்தாபாவின் தலைமைத்துவ ஆளுமையுமே காரணமாகும்.

*பாலஸ்தீன - ஈ.பி.ஆர்.எல்.எப் உறவுகள்*

1977ம் ஆண்டு தோழர் இரத்தின சபாபதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி முகாமில் தோழர் பத்மநாபாவும் ஏனையோரும் முதன் முதலில் தெற்கு லெபனானில் அல்பற்றா இயக்கத்தினால் பயிற்றுவிக்கப்பட்டனர். பின்னர் தோழர் ரட்ணாவின் இயக்கத்தினுள் தோன்றிய முரண்பாடுகளின் விளைவாக தோழர்கள் ஈழத்தில் பல்வேறு குழுக்களாக செயற்பட்டு வந்தவர்களுடன் சுயாதீனமாக மக்கள் இயக்க வேலைகளில் ஈடுபட்டு வரலாயினர்.

1977ம் ஆண்டு முதல் 1981ம் ஆண்டு ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பாளர் மாநாடு கூட்டப்பட்டு ஈ.பி.ஆர்.எல்.எப் பிரகடனம் செய்யப்படும்வரை இவ்வாறு சுயாதீன செயற்பாடுகளே நடைபெற்று வந்தன. இக்கால கட்டத்தில் ஈழ மாணவர் பொது மன்றமும் (GUES) ஈழத்திற்கு உள்ளேயும், வெளிநாடுகளிலும் பன்முகப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தன.

அப்போது 1980ம் ஆண்டு இலண்டனில் செயற்பட்டு வந்த ஈழ மாணவர் பொது மன்றப் பிரதிநிதி சர்வதேச முற்போக்கு மாணவர் அமைப்புக்களுடாக லெபனானில் நடைபெற்ற ஜோர்தானிய பொது மாணவர் மன்றத்தின் மாநாட்டிற்கு ஜி.யு.ஈ.எஸ் சார்பில் அழைக்கப்பட்டார் முற்போக்கு மாணவர் மன்றங்களின் இம் மாநாட்டில்தான் முதன் முதலில் ஜி.யு.ஈ.எஸ் இற்கும் பி.எப்.எல்.பி இற்கும் இடையேயான தொடர்பு ஏற்படுத்தப்பட்டது.

1981ம் ஆண்டு ஈ.பி.ஆர்.எல்.எப் பிரகடனப்படுத்தப்பட்ட பின் இவ்வுறவு ஈ.பி.ஆர்.எல்.எப் - பி.எப்.எல்.பி உறவாக பரிணமித்தது. தோழர் நாபாவின் பார்வையும் பி.எப்.எல்.பி யின் பார்வையும் பல விதங்களில் ஒத்து இருந்தமை இவ்வுறவை மேன்மேலும் பலப்படுத்தியது.

**ஈ.பி.ஆர்.எல்.எப் இன்தோழர்கள் பலர் பி.எப்.எல்.பி இன் பாசறைகளில் பயிற்றப்பட்டனர். இவ் ஏற்பாடுகளில் டாக்டர் ஹபாஸ், அபு அலி முஸ்தாபா போன்ற தலைவர்கள் நேரடியாகவே ஈடுபட்டு ஈ.பி.ஆர்.எல்.எப் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை ஏற்படுத்தியமையையும் நாம் இன்று நினைவு கூரல் வேண்டும்.**


சம காலத்தில் உமா மகேஸ்வரன் தலைமையிலான புளொட் இயக்கமும் பி.எப்.எல்.பி யுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தோழர்களை பயிற்றுவித்தது.

அக்காலகட்டத்தில் அபு அலி முஸ்தாபா போன்ற தலைவர்கள் இயக்க ஒற்றுமை பற்றியும், மக்கள் இயக்க செயற்பாடுகள் பற்றியும் அக்கறையுடன் விசாரிப்பதுடன் இவற்றை வலியுறுத்தியும் வந்தார்கள்.

1983ம் இற்குப் பின்னர் தோன்றிய சூழ்நிலையில் பி.எப்.எல்.பி யின் தலைமையின் பிரதிநிதிகள் இந்தியாவிற்கு வந்து எமது செயலாளர் நாயகத்தைச் சந்தித்து பரஸ்பர உறவுகளை மேன்மேலும் வளர்த்தனர். அக்காலகட்டத்தில் புளொட் இனுள் நிலவிய ஜனநாயக மீறல்கள் அராஜகப் போக்கு புதிய பாதையின் தோற்றம் ஆகியவற்றினால் அதிருப்தியடைந்த பி.எப்.எல்.பி பிரதிநிதிகள் தோழர் நாபாவுடனும் ஈ.பி.ஆர்.எல்.எப் உடனும் உறவை மேன் மேலும் உறுதியாக வளர்த்தனர்.

அபு அலி முஸ்தாபாவின் இழப்பு ஜனநாயக மக்கள் இயக்கங்களில் நம்பிக்கைக் கொண்ட விடுதலை வேட்கை உள்ளவர்களுக்கு ஒரு பேரிழப்பாகும்.

**லண்டனிலிருந்து -தம்பையா**



**ஈ.பி.ஆர்.எல்.எப் இன் தோழர்கள் பலர் பி.எப்.எல்.பி இன் பாசறைகளில் பயிற்றப்பட்டனர். இவ் ஏற்பாடுகளில் டாக்டர் ஹபாஸ், அபு அலி முஸ்தாபா போன்ற தலைவர்கள் நேரடியாகவே ஈடுபட்டு ஈ.பி.ஆர்.எல்.எப் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை ஏற்படுத்தியமையையும் நாம் இன்று நினைவு கூரல் வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோக்கிரட்டீஸ் பதில்கள்

எஸ். லோகநாதன் - வவுனியா.



**பிரபல சிங்கள கலைஞர் அமரதேவா அவர்கள் பிலிப்பைன்ஸின் மக்ஷாசே விருது பெற்றது பற்றி?**

கிரிக்கெட் கிண்ணங்களில் மூழ்கிபோயிருக்கும் ஒரு நாட்டில் ஒரு கலைஞனுக்கு இத்தகைய விருது கிடைத்தது இலங்கை கலைஞர்களுக்கு ஒரு நம்பிக்கையளிக்கும் விடயமாகும்.

கே. சண்முகராஜா - முகத்துவாரம்

**ஐ.தே.க மேடையில் தமிழ் சிங்கங்கள் கர்ச்சிக்கின்றனவே?**

ஐ.தே.க ஜனநாயகக் கட்சியல்லவா! அவர்கள் இந்த நாட்டில் ஒரு அநியாயத்தையும் செய்யவில்லை. என்ன தலை சுத்துகிறதா. நம்மவர்களைப் போல சுத்துமாத்துகாரர்கள் யார் இருக்கிறார்கள்.

ஏ. ஜெயராணி - கந்தர்மடம்.

**சங்கிலியன் படை அறிக்கையின் செய்தி நதிமூலம் ரிசிமூலம் தேடி யாழ்ரா பத்திரிகை ஒன்றுக்கும் பா.உ ஒருவருக்குமிடையில் குழாயடிச் சண்டை நடக்கிறதே?**

அது வெறும் வார்த்தைகளால் இருந்தால் பரவாயில்லை. ஆனால் மகேஸ்வரர் உயிர் அச்சுறுத்தல் விடும் வன்முறை கூடவே கூடாது.

ஆர். வீரக்குட்டி - களுவாஞ்சிக்குடி

**"பத்திரிகையாளர்" நடேசன் அவர்கள் வீரத்திலகமிட்டு மக்கள் பிள்ளைகளை போருக்கு அனுப்புவதாக வீரகேசரியில் கட்டுரை வரைந்திருந்தாரே?**

அது நடந்ததோ என்னவோ, நடேசன் தனது பிள்ளைகளில் எவரையாவது அவ்வாறு அனுப்பினாரா என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள்.

எம். உதயமூர்த்தி - உவர்மலை

**இந்திய அமைதிப்படை காலத்தில் கட்டாய ஆட்சேர்ப்பு தொடர்பாக நடேசன் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தாரே?**

என்னய்யா புதுக்கதை. இந்த சாட்சாத் நடேசன் தான் அப்போது மாகாண சபையின் தகவல் அதிகாரியாக இருந்தவர். ஏன் இந்தச் செய்தியை அப்போது இருட்டடிப்புச் செய்து பத்திரிகா தர்மத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தினார்.

*எஸ். லவண்டன் - பேசாலை*

**சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் துரோகிகள், துரோகம், அடிவருடிகள் பற்றியெல்லாம் பேசுகிறாரே?**

அவர் தன்னை ஒரு தடவை கண்ணாடியில் பார்த்தால் உண்மை சட்டெனப் புரியவரும். அவர் வருடாத அடிகளா? செய்யாத துரோகமா? அவர் யாரைப்பற்றி கூறுகிறார். தன்னைப்பற்றியல்லவா!

பி. ராஜ்குமார் - கோயம்புத்தூர்.

**சிவாஜி கணேசனை கலைஞன் இல்லை என்றவர்கள் கண்ணதாசனைக் கவிஞன் இல்லை என்றவர்கள் எவ்வாறு ஏடுபுரட்டினார்கள்?**

ஒரு காலத்தில் ஏற்றுக் கொள்ளாதவர்கள் இன்னொரு காலத்தில் அவ்வாறு ஏற்றுக் கொள்வது ஒன்றும் தவறான நடவடிக்கையல்ல. ஆனால் தம்மையும் குழப்பி மற்றவர்களையும் குழப்புவதுதான் இங்கு பிரச்சினை.

எஸ். கண்ணன் - புழல், சென்னை.

**மறைந்த தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனார் தனது வாழ்நாளில் எதனை சாதித்தார்?**

அவர் ஒரு கிங் மேக்கராக வாழ்ந்தார் என்றால் அது மிகையல்ல. நிலப்பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்து எளிமையான காந்திய வாழ்க்கையை கடைபிடித்தவர். அரசியல்வாதிகளுக்கு சில முன்மாதிரிகள் அவரிடம் இருந்தன.

கே. அபிராமி - நுவரெலியா.

**வண்டியோட சக்கரங்கள் இரண்டு வேண்டும். இலங்கை அரசாங்கத்தை கொண்டு நடத்த பொதுஜன முன்னணி –ஜே.வி.பி சக்கரங்கள் போதுமா?**

ஏதாவதொன்று அச்சுக் கழராமல் இருந்தால் சரி.

ஆர். லம்பேர்ட் - நீர்கொழும்பு.

**ஏரிக்கரை பத்திரிகையும் ரூபவாகினியும் அரசின் ஊது குழல்கள் என்கிறார்கள் அப்படியானால் லீடர், எம்.ரி.வி இவை சுயாதீனமானவையா?**

இவை ஐ.தே.க யின் ஊதுகுழல்கள் என்பதற்கான குணங்குறிகள் அச்சொட்டாக இருக்கின்றனவே. நடுநிலையா? அது சுத்தப் பேத்தல்.

எஸ். சிவச்சந்திரன் - நெல்லியடி.

**விநாயகப் பா.உ பாராளுமன்றம் அந்தா இந்தா கலையும் என்ற நேரத்தில் பாராளுமன்ற செயலாளரூடாக BMW காருக்கு விண்ணப்பித்திருக்கிறாராமே?**

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண். கண்டியளோ. இப்படி பல எம்.பி க்கள் மானியவிலைக் காருக்கு "புக்" செய்திருக்கிறார்களாம் என்று ஞாயிற்றுக் கிழமை ஆங்கிலப் பத்திரிகைகளில் வந்திருக்கு. இதனை விற்று தமது பொக்கற்றுக்குள் போடப் போகிறார்களா? இல்லாட்டி தியாகம் பல புரிவதாகக் கூறும் புலிகளுக்கு எல்லாவற்றையும் கொடுக்கப் போகிறார்களா? என்ன கதைக்கிறீர் இந்த லொள்ளுதானே வேணாங்கிறது. அந்தோனியாருக்கு பகிடியும் தெரியாது வெற்றியும் தெரியாத மாதிரி.

கே. ஜீவரத்தினம்-மட்டக்களப்பு.

**கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதல் உலகநாடுகளை அதிசயத்தில் ஆழ்த்தியுள்ளது. என்டயே விமான நிலையத்தில் விமானத்துடன் கடத்திப் பணயம் வைக்கப்பட்ட பயணிகளை காப்பாற்ற இஸ்ரேலிய கமாண்டோக்கள் நடாத்திய தாக்குதலைவிடவும் மேலானது என அஹிம்சைவழியில் செயற்படுபவர்கள் என்றும் கூறிக்கொள்ளும் த.வி.கூ எம்.பி ஒருவர் தனது நிகழ்ச்சி ஒன்றிலேயே கூறியுள்ளாரே?.**

அப்படியானால் உள்ளூர் விமானங்கள் நான்கினை ஒரே நாளில் கடத்தி அமெரிக்காவின் உலக வர்த்தகமையத்தின் நிர்மூலமாக்கிய தற்கொலைத்தாக்குதலை அதைவிட அதிசயம் என்று சொல்லுவாரோ.

வி. துவராசா வத்தளை.


**மின்சார வெட்டின் போது போக்குவரத்து நெருக்கடிகள் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிப்பு என அடுத்தடுத்து பிரச்சினைகள் அதிகரித்துச் செல்கின்றனவே?**

இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு சமாதானம் நிலைநாட்டப்படுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படாவிட்டால் இந்த நாடு மீள முடியாத தூரத்திற்கு பிரச்சினைகளுள் அமிழ்ந்து விடலாம்.

# பதினெட்டாவது அட்சக் கோட்டில்

## அசோகமித்திரன்

என் சிறுபிராயத்தைக் கழித்த சிகந்தராபாத்தில் மே மாதக் காலைக்குள் மனதுக்கு உற்சாகமளிப்பதாக இருக்கும். ஆகாயத்தைப் பார்க்கத் தடுக்கும் பல மாடிக்கட்டிடங்கள் அந்த நாளில் கிடையாது. ஊரெங்கும் நிறைய மரங்கள், நிறைய திறந்த வெளியும் உண்டு. காலை வேளையில் திரும்பிய இடமெல்லாம் பறவைகளும் அணில்களும் தெரிய வரும். வெளியில் பகலின் கடுமையை அடைவதற்கு முன் சாத்தியமான ஓரிரு மணி நேரத்தில் அவை அங்குமிங்கும் ஓடிப் பார்த்து தம் குரல்களை இயன்றவரை பயன்படுத்தி பின் ஓய்ந்துவிடும். அந்த ஓரிரு மணி நேரத்தின் இடைவெளி, நாளெல்லாம் காத்திருப்பதற்குச் சிறப்பாக ஈடுசெய்து விடும்.



மே மாதக் காலைகள் அன்று அவ்வளவு சந்தோஷமளித்ததற்கு இன்னொரு காரணம் உண்டு. மே மாதத்தில் பள்ளி இறுதிப் பரீட்சைகள் முடிந்து முடிவுகளும் தெரிவிக்கப்பட்டிருக்கும் அடுத்த வகுப்பு ஆசிரியர்களும் பாடங்களும் கவலையாக மாற அதற்குள் வழியில்லை. மனம் இலேசாக இருக்கும். கழுத்துப் புடைக்க அணில் கத்துவது கேட்கக் கிடைக்காத சங்கீதமாக இருக்கும்.

அப்படியொரு மே மாதத்தில்தான் திடீரென்று ஒரு நாள் இரண்டாம் உலகப்போர் முடிந்து விட்டதென அறிவிப்பு வந்தது. முற்றிலும் ஓயாவிட்டாலும் ஐரோப்பா வரை முடிந்துவிட்டது. ஹிட்லரும் அவனுடைய மனைவியும், கோயபல்ஸூம் அவனுடைய மனைவியும் குழந்தைகளும் தற்கொலை செய்து கொண்டு விட்டார்கள். மனிதனையும் மனித உயிரையும் தூசாக மதித்தவர்கள் இப்போது மாறு வேடத்திலும் தற்கொலையிலும் தப்பித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. உலகத்துக்கு நாசம் விளைவித்து விட்டு தங்கள் நாட்டையும் நாசமாக்கி விட்டார்கள்.

இந்த உலகப் போர் இந்திய எல்லையோடு வந்து போய் விட்டது எனலாம். பீரங்கி வெடித்து மக்கள் மாளவில்லை. விமானத் தாக்குதல் இது நகரங்களில் ஐந்தாறு குண்டுகளோடு முடிந்து விட்டது.

இதுதான் நடக்கவில்லையே தவிர வேறு பலவிதங்களில் உலகப்போர் இந்தியர் எல்லாரையும் கிராய்த்துப் போனது. தலைமைய் எண்ணித் தானியம் [illegible] கிடையாது. கோதுமை கிடையாது. சோளம், ரேஷன் அதிகாரிகள், லஞ்சம், கறுப்பு மார்க்கட்டு, தெரு விளக்குகளுக்குக் குல்லாய் மாதிரி ஒன்றைத் தொங்கவிட்டார்கள். வெளிச்சம் கம்பத்தின் காலுக்குத்தான். வீட்டு வெளிச்சம் இரவில் வெளியே தெரியக்கூடாது. ஜன்னலை மூடிவை. திறந்த வெளியாயிருந்த இடங்களில் சினிமா இந்திரனின் வஜ்ராயுத வடிவில் (அல்லது மின்னலடிக்கும் வெண்மை விளம்பரத்தின் மின்னல் வடிவத்தில்) ஆறடி ஆழத்துக்கும் பள்ளம் - குண்டு வீச்சின் போது பதுங்கிக் கொள்வதற்கு. சாலையில் மிலிடெரி வண்டிகளைக் கண்டாலே பதுங்கத்தான் வேண்டும். "அங்கே நாங்க ஆயிரக்கணக்கிலே சாகிறோம். இங்கே ஒரு பையன் லாரியடியிலே செத்ததற்குக் குய்யோ முறையோன்னு கத்தறீங்களே!" - இவை தவிர இன்னும் பல விதங்களில் மக்கள் மாறிக் கொண்டிருந்தார்கள். பண விநியோகம் பழக்கப்பட்ட நிதான நிலை தவறியிருந்தது. பணம் கிடைத்தவர்கள், கிடைக்காதவர்கள் இருவருமே தடுமாறினார்கள். கண்ணியம் பொது வாழ்க்கையில் இரண்டாம் பட்சமாக மாறிக் கொண்டிருந்தது.

யுத்தம் நின்று விட்டது என்றவுடன் எனக்கு இனி ரேஷன் கடையில் காத்துக் கிடக்க வேண்டாம் என்று தோன்றியது. எங்கள் வீட்டிலிருந்து ரேஷன் கடைக்கு ஒரு மைல் தூரம் நடக்க வேண்டும். எப்போது என்ன தரப்படும் என்று காலையிலும் மாலையிலும் போய் விசாரித்து வர வேண்டும். ஒரு பிற்பகல் தவறவிட்டு அடுத்த நாள் காலை போய் நின்றால் நேற்றே எல்லாம் வந்து தீர்ந்து விட்டது என்று பதில் வரும்.

ஐரோப்பிய யுத்தம் முடிந்து, ஜப்பான் யுத்தம் முடிந்து, கொரியா யுத்தம் முடிந்து, சூயஸ் யுத்தம் முடிந்து, பங்களாதேஷ் யுத்தம் முடிந்து, வியட்நாம் யுத்தம் முடிந்து... எவ்வளவு யுத்தங்கள்தாம் முடிந்து விட்டன! இவை தவிர துப்பாக்கி ஏந்தாத யுத்தங்களும் தான் எவ்வளவு நடந்து விட்டன, நடந்து கொண்டிருக்கின்றன! இப்போது ரேஷன் விநியோகம் என்ற ஏற்பாட்டில் ஒவ்வொரு சமயத்திலும் ஏதாவது ஒன்று கிடைக்காமல் தான் போகிறது. இந்த நாற்பதாண்டு ரேஷன் பழக்கத்தில் கவலைகளும் மாறிவிட்டன. முன்பு ஸ்தம்பிக்க வைத்த கவலை இன்று உதறித் தள்ளப்பட்டுக் கிடக்கிறது. அதன் இடத்தை வேறு கவலைகள் எடுத்துக் கொண்டு விட்டன.

இப்போதும் மே மாதக் காலைகள் அழகாகத்தான் இருக்கின்றன. சில செய்திகள் நற்செய்திகளாகத்தான் கூறப்படுகின்றன. ஆனால் யுத்தம் முடிந்து விட்டது என்ற செய்தி அன்று கொடுத்த உற்சாகம் அடிக்கடி ஏற்படுவதில்லை.

*தொடரும்.....*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஓபன் ரெனிஸ்–2001

சர்வதேச ரெனிஸ் போட்டிகளில் நான்கு போட்டிகள் "கிறான்ட் ஸ்லாம்" (Eewnol Slnam) என்றழைக்கப்படுகின்றன. அவை "விம்பிள்டன் ஓபன்" (இங்கிலாந்து) "அவுஸ்திரேலியன் ஓபன்", "பிரான்ஸ் ஓபன்" அமெரிக்கன் ஓபன் ஆகியனவாகும். இவற்றில் விம்பிள்டன் போட்டிதான் பிரபலமானதும் அதிக பரிசுத் தொகை கொண்டதுமாகும். ஏனெனில் உலகில் இன்று சர்வதேச அளவில் விளையாடப்படும் பிரபல விளையாட்டுக்கள் பெரும்பாலானவற்றின் தாய் நாடே இங்கிலாந்துதான். அடுத்து அமெரிக்காவைக் கூறலாம்.

இந்த "கிராண்ட் ஸ்லாம்" ரெனிஸ் சுற்றுப்போட்டிகள் வருடம் தோறும் நடைபெறும். வருட ஆரம்பத்தில் முதலில் பிரான்ஸ் ஓபன் போட்டிகள் நடைபெறும். அதனை அடுத்து அவுஸ்திரேலிய ஓபன், அதன் பின் விம்பிள்டன், கடைசியாக அமெரிக்க ஓபன்.

செப்டெம்பர் மாத ஆரம்பத்தில் தொடங்கி இரண்டு வாரங்கள் நடைபெற்ற 2001க்கான அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டிகளில் இம்முறை பெரிய அளவில் "அப்செட்" எதிர்பாராத (முடிவுகள்) ஏற்படவில்லை பெரும்பாலும் உலக தரத்தில் முதல் 15நிலையில் உள்ளவர்களும் வீராங்களைகளும் கால் இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தனர்.

ஆண்களில் பிரபல வீரர்கள் பீட் சாம்பிராஸ், அன்ட்றே அகசி, ரொட் மாட்டின் (மூவரும் அமெரிக்கர்கள்) மாறட் சாஃபின், காஃபெல்னிகோவ் (ரஷ்யா) பற்றிக் றாஃப்ரர், லேட்டன் ஹெவிட் (அவுஸ்திரேலியா) குஸ்ராவ் குவேட்டன் (பிறேசில்) ரிம் ஹென்மன் (பிரிட்டன்) ஜீவான் காலோஸ் பெரேரோ, அல்பேட் கொஸ்ரா, அலெக்ஸ் கொஹெட்ஜா (ஸ்பெயின்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

பெண்சாரில் அமெரிக்க வீராங்கனைகள் வீனஸ் வில்லியம்ஸ், சேரினா வில்லியம்ஸ், லின்ட்சே டவன்போட்,




ஜெனிபர் கப்றியாட்டி, மொனிக்கா செலஸ் (இவர் முன்னாள் யூகோஸ்லாவியரும் தற்போதைய அமெரிக்க பிரஜையுமாவர்) பிரான்ஸ் வீராங்களைகள் சான்ட்றித் டெஸ்ட்டட், நதாலி டவுசியாட், அமெலி மொறசொமோ, ரஷ்ய வீராங்களைகள் அனாகோஹிகோவா, எலினா டெமென்டீவா, ஸ்பெயினின் அரஞ்சா சஞ்கேஸ் விக்காரியோ, கொஞ்சிற்றா மாட்டினஸ், பெல்ஜியம் நாட்டின் கிம் கிளிஸ்ரஸ் ஜஸ்ரின் ஹெநின் சுவிஸ் நாட்டின் உலகின் முதல் நிலை வீராங்களை மாட்டினா ஹிங்கிஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். ஜேர்மனியின் பிரபல வீராங்கனை ஸ்ரெபிகிறாஃப் ஓய்வு பெற்றபின் அந்நாட்டிலிருந்து குறிப்பிடத்தக்க அளவுக்கு வீராங்கனை எவரும் இன்னும் முன்னணிக்கு வரவில்லை.

ஆண்களில் பீட்சாம்பிராஸ் அமெரிக்கா மாறட் சாபின் (ரஷ்யா) யெவ்ஜெனி கபல்னிகோவ் (ரஷ்யா) மற்றும் அவுஸ்திரேலியா இளம் வீரர் லேட்டன் ஹேறவிட் ஆகியோர் கால் இறுதிப்போட்டியில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தேறினர். சாம்பிராசும் அகசியும் போட்டி நிரலில் ஒரே குழுவில் இடம்பெற்றதானது இருவரும் கால் இறுதியில் ஒருவரை ஒருவர் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. பலத்த போட்டியின் பின் சாம்பிராஸ் வெற்றி பெற்றார்.

உலகின் முதல் நிலை வீரரும் பிரான்ஸ் ஓபன் சம்பியனுமான குஸ்ராவ் குவேட்டன் (பிறேசில்) விம்பிள்டன் சம்பியன் பற்றிக் றாஃப்ரர் ஆகியோர் அரையிறுதிக்குள் நுழைய முடியவில்லை.

அரையிறுதியில் சாம்பிராசை எதிர்த்து மாறட் சாபினும் கபல்னிகோவை எதிர்த்து லேட்டன் ஹேறவிட்டும் மோதினர். இதில் சாம்பிராசும் ஹேறவிட்டும் வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் மோத தெரிவானார்கள். 30வயதான சாம்பிராஸ் கடந்த 10ஆண்டுகளில் 13 "கிரான்ட் ஸ்லாம்" போட்டிகளில் வெற்றிபெற்று உலகில் முதல் நிலை வீரராக நீண்ட காலம் இருந்தவர். கடந்த 10-09-2001 அன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் இளம் வீரர் ஹெவிட் அபாரமாக ஆடி 7-6, 6-1, 6-1 என்ற ஆட்ட அடிப்படையில் நேர் செட்களில் சாம்பிராசை வென்று 8,50,000 டொலர் பரிசையும் கிண்ணத்தையும் பெற்று இந்த வருட அமெரிக்கன் ஓபன் சம்பியனானார். இந்த விருதை வென்ற இரண்டாவது அவுஸ்திரேலியர் ஹெவிட் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்கள் பிரிவில் உலகின் முதல் நிலை வீராங்கனை மாட்டினா ஹிங்கிஸ், கடந்த வருட அமெரிக்கா ஓபன் சம்பியனும் இவ்வருட விம்பிள்டன் சம்பியனுமான வீனஸ் வில்லியம், அவரின் இளைய சகோதரியும் 1999ம் ஆண்டு அமெரிக்க ஓபன் சம்பியனுமான செரினா வில்லியம்ஸ், மற்றும் அமெரிக்க வீராங்கனை, ஜெனிபர் கப்றியாட்டி ஆகியோர் ஆரம்பத்தில் இருந்து திறமையாக, ஆடி அரையிறுதிக்குள் நுழைந்தனர். மார்ட்டினா ஹிங்கிசைத் தவிர ஏனைய மூவரும், அமெரிக்கர்கள். அரையிறுதியில் வீனசை எதிர்த்து கப்றியாட்டியும் செரினாவை எதிர்த்து ஹிங்கிசும் மோதினர். வீனஸ், சொன் சகோதரரிகள் இருவர் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர்.

இதன் மூலம் ரெனிஸ் கிறாண்ட் ஸ்லாம் வரலாற்றில் இரண்டு சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன.

1. 1884ம் ஆண்டு முதலாவது விம்பிள்டன் பெண்கள் போட்டியில் மோட் வட்சன் (Mavd Watson) விவியன் வட்சன் என்னும் இரு சகோதரிகள் இறுதிப் போட்டியில் மோதிய பின் 117வருடங்கள் கழித்து வில்லியம் சகோதரிகள் மோதியது.

2. முதன்முதலாக ஒரு "கிரான்ட் ஸ்லாம்" போட்டியில் இரண்டு கறுப்பு இன பெண்கள் மோதியது.

08-09-2001 அன்று 23ஆயிரத்துக்கு மேற்பட்ட ரசிகர்கள் முன்னிலையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் அக்கா வீனஸ் 6-2, 6-4 என்ற நேர் செட்களில் தங்கை செரினாவை வென்று 8லட்சத்து 50ஆயிரம் டொலர் ரொக்கப் பரிசையும் வெற்றிக்கிண்ணத்தையும் சுவீகரித்தார். தங்கை செரினா 4 லட்சத்து 25ஆயிரம் டொலர் பரிசாகப் பெற்றார். ஆக இரு சகோதரிகளும் மொத்தம் 12லட்சத்து 75ஆயிரம் டொலர் தங்கள் குடும்பத்துக்கு சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் போட்டில் மட்டும் இவர்கள் பெற்ற பரிசுத் தொகை இலங்கை நாணயத்தில் 11கோடியே 47லட்சத்து 50ஆயிரம் ரூபாய்கள் ஆகும்.

ஒரு சாதாரன அமெரிக்க கறுப்பு இன குடும்பத்தில் வில்லியம்ஸ் தம்பதியினருக்கு 4பெண் பிள்ளைகள். ஆண் வாரிசே கிடையாது. இருந்தும் என்ன குறை மகள்கள் வீனசும், செரினாவும் சர்வதேச மட்டத்தில் ரெனிஸ் ஆடத் தொடங்கி கடந்த சில வருடங்களுக்குள்ளாகவே தங்கள் குடும்பத்துக்கு கோடி கோடியாக பணம் சம்பாதித்துக் கொட்டிவருகிறார்கள். இத்தனைக்கும் இந்தத் துறையில் இவர்களின் பயிற்சியாளரும் குருவும் யார் தெரியுமா? சாட்சாத் தந்தை வில்லியம்ஸ் அவர்களே. ஆனால் வில்லியம்ஸ் அப்படி ஒன்றும் முன்னாள் பிரபல ரெனிஸ் வீரரும் அல்ல. சுமாராகவே விளையாடக் கூடியவர். உலகின் பிரபல ரெனிஸ் வீரர்கள், வீராங்கனைகள் அனைவரும் ஆயிரக்கணக்கில் சம்பளம் கொடுத்து பயிற்சியாளர்களை தங்களுக்கென்று வைத்துள்ளார்கள். வில்லியம்ஸ் சகோதரிகளுக்கு அந்த தேவையோ செலவோ கிடையாது.

இவர்களின் வெற்றி பெண் குலத்துக்கு பெருமை.

வேதநாயகம்.

# ஈ.பி.எப் – ஈ.ரி.எப்

# இரண்டையும் திருப்பிக் கொடு

யுத்தம் என்றால் யுத்தம் சமாதானம் என்றால் சமாதானம் என சூளுரைத்ததன் விளைவாக தோன்றிய 1983 ஜூலை வன்செயல் இலங்கை வரலாற்றில் ஓர் கறைபடிந்த சம்பவமாகிவிட்டது. இது சகல தமிழ் மக்களின் வாழ்விலும் ஓர் இருண்ட யுகமாகி, அதனோடு ஆரம்பித்த கொடிய யுத்தமும் முடிவில்லாமல் தொடர்ந்து செல்கின்றது. இந்த அதர்ம செயலால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் மலையக மக்கள் என்றால் மிகையாகாது.

இந்த வன்செயலால் இந்திய கப்பற் சேவை நிறுத்தப்பட்டதால் பாஸ்போர்ட் பெற்ற தொழிலாளர்கள் இந்தியா செல்ல முடியாமல் போய்விட்டது. அதுமட்டுமல்ல குடும்பத்தில் ஒரு பகுதியினர் இந்தியா மறு பகுதியினர் இலங்கை என்ற நிலை ஏற்பட்டது. இவர்களில் அதிகமானோர் ஊழியர் சேமலாப நிதி, சேவைகால பணம் போன்றவைகளை தோட்ட நிர்வாகத்திடமிருந்து பெற்று இந்தியா செல்லவிருந்த வேளையில் தான் இந்த கொடிய வன்செயல் கட்டவிழ்த்து விடப்பட்டது.

கொடுப்பனவுகளை தோட்ட நிர்வாகத்திடமிருந்து பெற்றதனால் இவர்களுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டது. தொழிற்சங்கங்களின் முயற்சியினால் மீண்டும் வேலை வழங்கப்பட்டது. இப்படிப்பட்டவர்களின் ஊழியர் சேமலாப நிதி (ஈ.பி.எவ்), ஊழியர் நம்பிக்கை நிதியம் (ஈ.ரி.எவ்) போன்றவை மாதாந்தம் அவர்களின் சம்பளத்தோடு வழங்கப்பட்டது.

இது பல குளறுபடிகளை ஏற்படுத்தியதால் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் பெயர்களில் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. இது ஒருவகையில் தொழிலாளர்களுக்கு சேமிப்பாக அமைந்தாலும் தோட்ட நிர்வாகங்கள் முறையாகவும், சரியாகவும் வங்கிக்கு இந்தப் பணத்தை அனுப்பகையினாலும் இன்னும் சில தோட்டங்களில் இந்தப் பணத்தை தோட்டக் காரியாலயங்களிலேயே வைத்திருந்ததனாலும் தொழில் திணைக்களத்திற்கு புகார் செய்யப்பட்டது.

முன்னாள் தொழில் ஆணையாளர் 1992-04-30 இல் ஊழியர் சேமலாபநிதியை மீளப் பெற்ற தோட்டத் தொழிலாளர்கள் மீண்டும் தோட்டத்தில் வேலை செய்வதால் இந்நிதியை தோட்டக் காரியாலயத்தில் வைத்திருப்பதோ அல்லது தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்வதோ ஊழியர் சேமலாப நிதி விதிமுறைக்கு விரோதமானது எனவும் இந்தத் தொகையை புதிய அங்கத்துவ இலக்கங்களை கொடுத்து மத்திய வங்கிக்கு வட்டியோடு சேர்த்து அனுப்பி வைக்கும்படி சுற்றறிக்கை மூலம் கேட்கப்பட்டது. ஆனால் தோட்ட நிர்வாகங்கள் இதை செய்யத் தவறிவிட்டன.

இதனால் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பீடு செய்யப்பட்ட தொகை அப்படியே இருந்தது. தோட்டக் காரியாலங்களில் வைக்கப்பட்டிருந்த பணத்திற்கு என்னவானது என்பது தெரியவில்லை. இந்நிலையில் தோட்ட நிர்வாகங்கள் கை மாறியது சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

மலையகத்தில் சில வருடங்களுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் தலைவர் தனது சங்கத்திற்கு அங்கத்தவர்களை சேர்ப்பதற்கும் தான் தொழிலாளர்கள் மேல் மற்றவர்களைவிட அக்கறை கொண்டவர் எனக் காட்டிக் கொள்வதற்காகவும் தேசிய சேமிப்பு வங்கியில் இருந்த பணத்தில் கடன் பெற்றுக் கொடுக்கும் யுக்தியை பாவித்தார்.

அப்பாவித் தொழிலாளர்கள் இந்தத் தலைவரின் ஆசை வார்த்தைகளை நம்பி தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து கடன் பெற்றனர். இதில் ஒரு தொகை கடனாகவும் இன்னொரு தொகை நிலையான வைப்பு கணக்கிலும் (Fixed Deposit) மிகுதி தொகைக்கு "பரிசுதிய லொத்தர் டிக்கட்டுக்கள்" ரூபா 500 முதல் ரூ2000க்கு மேலும் தொழிலாளர்கள் தலையில் சுமத்தப்பட்டது. இந்த பரிசுதிய டிக்கெட்டுக்கள் தொழிலாளர்களின் விருப்பத்தின் பேரில் வழங்கப்படவில்லை.

திரு. ஆர் சிவசாமி என்பவர் தனக்கு ஏற்பட்ட அவலத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்ததன் பயனாக தேசிய சேமிப்பு வங்கியின் பொது முகாமையாளர் 26.07.2001ல் கீழ்வரும் கடிதத்தை எழுதியுள்ளார்.

தங்கள் கணக்கில் தற்போதைய மீதி ரூபா 60,690,61 சலுகை அடிப்படையில் தங்களுக்கு நாங்கள் 29.04.2001ல் ரூபா 27,900 கடனாக வழங்கியுள்ளோம். ஆனால் இற்றைவரை இக்கடனில் ஒரு தவணைக் கட்டணப் பணத்தையாவது நீங்கள் செலுத்தவில்லை. இக்கடன்கணக்கில் சேர்ந்த வட்டி, பாதுகாப்பு வரி உட்பட ரூபா 42,552,நிலுவையாக உள்ளது. இதனால் நாம் மேலும் எந்தவொரு கடனையும் தங்களுக்கு வழங்கமுடியாதுள்ளது.

இதன்படி மேற்குறிப்பிட்ட திரு சிவசாமிக்கு இப்போது 40 வயதாகின்றது. இவருக்கு 60 வயதாகி தோட்ட சேவையிலிருந்து ஓய்வு பெறும் போது இவர் வங்கிக்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் கடனாளியாக வேண்டியுள்ளது.

இது சிவசாமிக்கு மட்டுமல்ல இந்த வங்கியிலிருந்து கடன் பெற்ற அனைவருக்கும் ஏற்படவுள்ள ஆபத்தாகும். ஆகையால் இக்கடன் முறையை நீக்கி சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் மேற்படி வங்கியிலிருந்து எடுத்த பணத்தைக் கழித்து மிகுதிப்பணத்தை தொழிலாளர்களிடம் கொடுக்க வேண்டும் அல்லது ஊழியர் சேமலாப நிதிக்கும் ஊழியர்நம்பிக்கை நிதியத்திற்கும் பணத்தை உடனடியாக அனுப்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஜனாதிபதி, தொழில் அமைச்சர், தொழில் ஆணையாளர் நாயகம், ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை பொது முகாமையாளர் ஆகியோர்களை எமது சங்கம் கேட்டுக் கொண்டது. இதற்கிணங்க ஊவா பிராந்திய தொழில் ஆணையாளர் இவ்விடயம் சம்பந்தமாக ஆராய்ந்து 16.08.2001ல் தொழில் ஆணையாளர் (ஊ.சே.நி) மற்றும் தொழில் ஆணையாளர் நாயகம் ஆகியோர்களுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து தேசிய சேமிப்பு வங்கி உயர் அதிகாரிகளோடு கலந்து பேசி இவ்வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள முழுத் தொகையையும் ஊ.சே.நி சம்பந்தப்பட்ட முழு விபரங்களோடு மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

இந்த நிதிக்குரிய தொழிலாளர்களின் பெயர்கள், தொகை போன்ற முழு விபரங்களோடு புதிய ஊ.சே.நி இலக்கங்களை வழங்கி மாவட்டத் தொழில் காரியாலயங்களின் உதவியோடு மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் எனவும் சிபார்சு செய்துள்ளார்.

தேசிய சேமிப்பு வங்கியில் உள்ள ஊ.சே.நி, ஊ.ந.நி பல இலட்சங்களாக உள்ளது. இதனால் தொழிலாளர்களுக்கு உரிய பிரயோசனங்கள் ஏற்படவில்லை. ஆகையால் இவ்வங்கியிலுள்ள பணத்தை சம்பந்தப்பட்ட தொழிலாளர்களிடம் ஒப்படைப்பதோடு முன்பு எடுத்த பணத்திற்கு எவ்வித வட்டியோ அல்லது கழிவுகளோ இல்லாமல் வழங்க வேண்டும். முடியாவிடில் உடனடியாக முழுப் பணத்தையும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியச் சபைக்கும் அனுப்பி வைக்கவேண்டும்.

இந்த நியாயமான கோரிக்கையின் வெற்றிக்காக சகல தோட்டத் தொழிலாளர்களும் ஒன்று படுவோம் என ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் ஆ.முத்துலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

**அ. முத்துலிங்கம் செயலாளர்**
**ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உயிர் நிழல்

பாரிசிலிருந்து வெளிவரும் இரு மாத இதழ். புதிய சமூக சூழலில் கருத்துத் தேடலில் ஈடுபட்டுள்ள சஞ்சிகை புலம் பெயர்ந்தவர்களும் பெயராதவர்களுமாக பலரும் எழுதுகிறார்கள்.

குறிப்பாக புலம் பெயர்ந்த சூழலில் சாதி, வர்க்கம், பெண்ணியம் பற்றிய தேடல் காணப்படுகின்றது.

*எக்ஸில்* என்ற பெயருடன் இன்னுமொரு சஞ்சிகை பாரிசிலிருந்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.



## சக்தி

சக்தி என்ற பெயரில் நோர்வேயிலிருந்து வெளிவருகிறது. தமிழ்ப் பெண்களின் சூழலில் சர்வதேச அனுபவங்களுடன் பகிர்ந்து கொள்வதாக இது வெளிவருகிறது. புலம்பெயர்ந்த இடங்களில் பெண்களின் செயற்பாடுகள் பற்றிய நம்பிக்கையூட்டும் தகவல்கள் வெளிவருகின்றன.




## பாரதி

திரைப்பட விமர்சனத்திரட்டுத் தொகுப்பு- க.தேவதாசன்
அச்சீடு - கண்ணகி பதிப்பகம்.
வெளியீடு - சலன சித்திரம்

பாரதி பற்றிய புதிய பிரதி விம்பத்தை கொடுத்த பாரதி திரைப்படம் பற்றி பல்வேறு ஆங்கில தமிழ்ப் பத்திரிகைகள், வலைத்தளங்களில் வெளிவந்த விமர்சனங்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார் சலன சித்திரம் தேவதாசன் அவர்கள்.

பாரதி திரைப்படம் பற்றிய விமர்சனங்களைத் தேடியலையாமல் ஒரே பார்வையில் பலவற்றை பார்ப்பதற்கு இந் நூல் உதவுகிறது.



## மூன்றாவது மனிதன்

மூன்று மாதத்துக்கொரு முறை பன்னிரண்டாவது சஞ்சிகை வெளிவந்துள்ளது. கலை இலக்கிய முயற்சிகளின் கனதியான விடயங்களைத் தாங்கி வெளிவருகிறது.

விஷேட அம்சம் என்னவென்றால் 2001 ஜூலை 28, 29 இல் ஈழத்து இலக்கிய சொல்நெறி அறிக்கை ஒன்று கூடல் நிகழ்ச்சியை நடத்தியது.

கோமல் சுவாமிநாதனின் இறுதிக்கால முயற்சியான சுபமங்களாவை ஒத்த ஒரு பங்களிப்பையே மூன்றாவது மனிதன் ஆற்றுகிறது எனலாம்.




## மனநதியின் சிறு அலைகள்


கே. விஜயன் அவர்களால் எழுதப்பட்ட நாவல் இது. இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட குறிப்புக்கள் இப்போது பூபாலசிங்கம் புத்தகசாலையால் வெளியிடப்பட்டுள்ளது.

இடதுசாரி இயக்க, தொழிற்சங்க வரலாறுகளில் பரவலாக பேசப்பட்ட நெசவாலை தொழிலாளர்களின் வாழ்க்கையினூடு இந்த நாவல் செல்கிறது.

ஆலைச் சங்கு அலறும் காலை என்று தொடங்கும் அமரத்துவம் வாய்ந்த சோவியத் நாவல் தாயின் பாதிப்புக்கள் காணப்படுகின்றன.

விஜயன் நெசவாலைத் தொழிலாளி ஒருவரின் மகன் என்பதால் உயிருட்டமானதாக இந்த நாவல் அமைகிறது.

ஒரு துயரக் காதலினூடாக வெள்ளவத்தை நெசவாலைத் தொழிலாளர்களின் துயரம் புலப்படுத்தப்படுகிறது.



## தமிழ்க் கடவுள் முருகன்

இங்கிலாந்தில் வாழும் எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட இந்நூல் முருகனின் பாரம்பரியத்தை ஆரிய திராவிட கருத்து நிலைகளிலிருந்து தேட முற்பட்டிருக்கிறது. ராகுல்ஜி சங்கிருத்தியன் போன்ற தத்துவவியலாளர்கள் றொமிலா தாப்பர் போன்ற வரலாற்றாசிரியர்களின் கருத்து நிலைகளிலிருந்தும் பல மேற்கத்திய தமிழக இலங்கை அறிஞர்களதும் கருத்துக்களிலிருந்தும் முருகனின் அடி முடி தேடும் முயற்சி சுவாரசியமாக இருக்கிறது. பெண்ணிலைவாத நோக்கில் இந்த ஆய்வுக்கட்டுரை தொடர்கிறது.

# புலிகளா தமிழ் மக்களின் பிரதிநிதிகள்?

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற சமாதான ஆய்வுப் பட்டறையில் நாட்டின் சகல பல்கலைகழகங்களினதும் மாணவப் பிரதிநிதகளும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை களமிறக்கினர். இலங்கைவாழ் மூவின மாணவர்களுடன் வெளிநாட்டு மாணவர்களும் பங்குபற்றிய அவ்வாய்வு பட்டறையில் யாழ் பல்கலை கழக மாணவர் பிரதிநிதிகளும் தமது கருத்துக்களை தாய் மொழியல் தவழ விட்டனர். ஒருவர் வெளியிடும் கருத்துக்களை கொண்டே அவர்களது சிந்தனை, பண்பு, வரலாற்றுணர்வு போன்றவற்றை மதிப்பிடலாம். அந்தவகையில் யாழ் பல்கலைகழக பிரதிநிதிகளது கருத்துக்களை ஈழ விடுதலை போராட்ட வரலாறு தெரிந்த எவரும் மானுடப்பண்பற்ற, வரலாற்றுணர்வில்லாத வெறும் ஏட்டுச்சுரக்காய்களாகவும் அதிகார வெறி பிடித்தவர்களின்அடிவருடிகளாகவுமே எண்ணுவர். அப்படி எண்ணுவதற்கான சில காரணங்களை இங்கு எடுத்துக்கூற வேண்டியது காலத்தினது தேவை மட்டுமல்ல மனித நேயத்தின் தேவையும்கூட.

இன்று இந்நாட்டு மக்கள் அனைவரினது மனங்களிலும் சமாதான தாகத்தை ஏற்படுத்தியுள்ள இன முரண்பாடுகள் தோற்றம் பெற்றவையும் அதற்கான தீர்வினை அகிம்சை வழியாக பெற்றுக்கொள்வதற்கு தமிழ் தலைவர்கள் முயற்சித்தமையும் கடந்தகால வரலாறு. அது முடியாத பட்சத்தில் கருவிகள் ஏந்தி களம் இறங்கியவர்களினது வீரத்தாலும் செயல்திறத்தாலும் சிங்கள இனவாதிகள் தடுமாறினர். தமிழர்கள் தலைநிமிர்ந்தனர். இழப்புக்களும் சோகங்களும் நிரந்தரமல்ல. சிங்கள இனவாதிகளின் கொடிய இடும்புப்பிடியில் இருந்து விடுதலை பெறுவதே நிரந்தர நிம்மதிக்கு வழிகோலப்போகிறது என எதிர்காலக் கனவுகளில் மிதந்திருந்தனர்.

இதனால் எதிரியுடன் களமாடி மரணத்தை தழுவிய ஒவ்வொரு வீரனுக்குமாய் தமிழினமே அழுதது. தன்வீட்டுச் சொந்தப் பிள்ளையின் இழப்பாக நினைத்துக் கதறியழ பெற்றோர்கள் எத்தனை பேர். அந்த இயக்கம் இந்த இயக்கம் என்ற வேறுபாடின்றி "எங்கட பெடியள் விடாங்கள்" என்ற எண்ணமே எல்லோர் நெஞ்சிலும் பதிந்திருந்தது.

காலப்போக்கில் விடுதலை இயக்க தலைமைகள் தமக்குள் முரண்படும் போக்குகள் உருவாகியது. மக்களின் மனதில் சிறிது சலனத்தை ஏற்படுத்திய போதும் 1985 காலப்பகுதியில் ஈரோஸ், ஈபி.ஆர்.எல்.எப், ரெலோ, எல்.ரி.ரி.ஈ ஆகிய இயக்கங்கள் ஒன்றிணைந்து ஈழத் தேசிய முன்னணி எனும் கூட்டுத் தலைமையை உருவாக்கிய போது மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். விடுதலைநிதர்சனமானது என எண்ணிப் பெருமிதமடைந்தனர். இந்தக் கூட்டுத்தலைமை நீடித்திருந்தால் தமிழ்மக்கள் இன்றைய அவலத்துள் சிக்கியிருக்கமாட்டார்கள். எதிரியும் எம் வீட்டு வாசலில் முகாமிட்டிருக்கமாட்டான். தமிழ் சமூகத்தின் விடுதலைக்காய் தம் வசந்த காலத்தை தொலைத்தவர்கள் எதிரியின் காலடியிலும், அந்நிய தேசங்களிலும் அல்லற்படவும் மாட்டார்கள்.

1986ம் ஆண்டு இரத்தக் காட்டேறியாக மாறினர் புலிகள். அதற்கு முதற்பலி ரெலோ. புலிகள் ரெலோ உறுப்பினர்கள் மீது மேற்கொண்ட கொடூரமான செயல்கள் மூலம் மக்களை மௌனிகளாக்கினர். தெல்லிப்பளை, நீர்வேலி உட்பட இன்னும் பல இடங்களில் எரியும் நெருப்பினினல் உயிருடன் எறிந்த சம்பவங்களை கண்ணால் கண்டவர்கள் இவர்களும் மனிதர்களா? விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்களா? சொந்த சகோதரர்களை இப்படி கொடுமைப் படுத்தும் இவர்கள் மக்களுக்கு எப்படி உரிமையைப் பெற்றுக் கொடுக்கப் போகிறார்கள் என தமக்குள் பேசிக்கொண்டனர். அதைவெளியே சொன்னால் துரோகி எனும் பட்டத்துடன் பொட்டு வைத்துவிடுவார்கள் என்பதால் மௌனமான மக்களின் மனக்கண்களில் இச் சம்பவங்கள் இன்னும் மறைந்துவிடவில்லை.

மக்களை தமது கொடூரச் செயல்களால் மௌனமாக்கிவிட்டு ஒவ்வொன்றாக விடுதலை இயக்கங்களை சின்னாபின்னமாக்கிய பின் இன விடுதலையின் தனிப்பிரதிநிதிகள் தாங்கள் தான் என்று மார்தட்டும் இவர்கள் எப்படி தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் ஆவார்கள். தெளிந்த சிந்தனையுள்ளவர்களும் மனித[illegible] வரலாறு தெரிந்தவர்[illegible] ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

1986 இற்கு முற்பட்ட காலப்பகுதியில் உண்மையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பொற்காலமே. ஏனெனில் அக்காலப் பகுதியில் ஒவ்வொரு தமிழ் மகனும் தன்னால் இயன்றதை விடுதலைப் போராட்டத்திற்காக செய்வதற்குச் சித்தமாயிருந்தான். படித்தவர்கள் முதல் பாமரர் வரை விடுதலைப் போராட்டத்தை பற்றியதான நிகழ்வுகளையும் நகர்வுகளையும் அறிவதற்கு மிகவும் ஆவலாக இருந்தனர். அவர்களுடைய எதிர்பார்ப்புக்கள் ஆர்வங்கள் எல்லாவற்றையுமே தவிடு பொடியாக்கி மாற்று இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக எத்தனை ஏழைகளின் பிள்ளைகளை கொன்றொழித்தார்கள்.ஏன் மற்றைய இயக்கத் தலைவர்கள், போராளிகள் இந்த மண்ணில் பிறந்தவர்கள்தானே? இனவாத கொடுமைக்கு ஆளான அவர்களுக்கு விடுதலை வேண்டி போராட உரிமை இல்லையா?

1986க்குப் பிற்பட்ட போராட்டம் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக நடத்தும் போராட்டமேயொழிய அது ஒட்டு மொத்தமான தமிழின விடுதலை போராட்டமல்ல. வேண்டுமானால் மேலாதிக்க சிந்தனையுள்ளோரும், மனித நேயம் மறந்தவர்களும் ஏட்டுச் சுரக்காய்களும் தமிழின விடுதலைப் போராட்டம் என்று கூறலாம். உண்மை அதுவல்ல.

யாழ்பல்கலைகழக பிரதிநிதி இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற சமாதான ஆய்வுப் பட்டறையில் தமிழ் தலைமை குறித்து தெரிவித்த உதாரணம் வேடிக்கையானதாகும். கிரிக்கெட் விளையாட்டுடன் அவர் இனப்பிரச்சினையை ஒப்பிட்டுள்ளார்.

"தமிழ் கட்சிகள் ஒருபுறமும் சிங்கள கட்சிகள் இன்னொரு புறமும் கிரிக்கெட் போட்டித் தொடர்" ஒன்றின் முடிவில் இரு பக்கங்களில் இருந்தும் இறுதியாட்டத்திற்கு தகைமை பெற்ற இரண்டு அணிகளே பங்குபற்ற முடியும். இதன்படி தமிழர்களின் தரப்பில் விடுதலைப் புலிகள் தமது திறமையான ஆட்டத்தின் மூலம் இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மறு தரப்பில் சிங்களவர்களின் சார்பில் ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணி தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று யாழ் பல்கலைகழக மாணவர் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

சமாதானம் எனும் இறுதியாட்டத்தில் புலிகளே தமிழர்கள் சார்பாக ஏகப்பிரதிநிதிகளாக பங்குபற்றும் தகுதியுடையவர்கள் என்று பிதற்றியுள்ளார். இங்கு சிங்களத் தரப்பில் உள்ளவர்கள் தமது திறமையான செயற்பாடுகள் மூலம் மக்கள் மனங்களை கவர்ந்து தம்மை ஜனநாயக ரீதியாக இறுதியாட்டத்திற்கு தகுதியுள்ளவர்கள் ஆக்கியுள்ளார்கள். ஆனால் தமிழர் தரப்பில் இறுதியாட்டத்திற்கு தகைமை பெற்றவர்களாக யாழ் பல்கலைகழக மாணவப்பிரதிநிதி குறிப்பிட்ட தரப்பினர் எவ்வாறு அந்தத் தகுதியைப் பெற்றனர்?

தகைமை என்பது போட்டியாளர்களை வஞ்சகமாக கொன்றொழிப்பதன் மூலம் அடையப்படுவதா? புலிகள் 1986ம் ஆண்டு காலப்பகுதியில் புரிந்த கொடூரங்களை நீங்கள் அறியவில்லையா? தமிழ் கட்சிகள் எதிரியின் நிழலில் நிற்கிறார்கள் என்று குற்றம் சாட்டுபவர்கள் அவர்களை இந்த நிலைக்கு உள்ளாக்கி தமிழர்விடுதலைப் போராட்டத்தை எதிரி கொச்சைப்படுத்தும் நிலைக்குள்ளாக்கியவர்கள் யார்? என்பதற்கும் பதில் சொல்லியாகவேண்டும்.

தமிழ் மக்களின் ஒற்றுமையான விடுதலைப் போராட்ட வரலாற்றுக்கு ஆப்பு வைத்த நிகழ்வுகளை நீங்கள் அறியாது போனாலும் மக்கள் மனங்களில் அவை பசுமரத்தாணியாக பதிந்துள்ளது. ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் அரசியல் ரீதியில் சிந்தனை தெளிவுள்ளவர்கள் மனிதநேயமிக்கவர்கள் இன்னும் வல்லமையுள்ள சமூகச் சக்திகள் எல்லோரையும் ஆயுதங்கள் மூலம் மரணப் புதைகுழியினுள் மௌனமாக்கிவிட்டு மக்களை வெறும் மந்தைக் கூட்டங்களாக்கியிருக்கும் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிகளா? யாழ் பல்கலைகழகத்தைச் சேர்ந்த சிலரும் வக்கற்ற யாழ் பிரதேச பத்திரிகைகளும் சுயலாபத்திற்காக நெஞ்சுரமின்றி அவ்வாறு தெரிவித்தாலும் சுய சிந்தனையுள்ளவர்கள் வரலாறு தெரிந்தவர்கள் இதனை ஏற்கத்தயாரில்லை.

- சுதந்தரி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Regd. in the Dep. of Posts of Sri Lanka under (No: QD / 41 / News / 2001)


# கண்ணீரும் வன்முறையும் போரும்



தண்ணீருக்குக் காத்திருக்கும் குடங்கள் -மன்னார்

காஷ்மீரில் சண்டை ஒன்றில் கொல்லப்பட்ட ஹிஸ்புல்லா முஜாஹிதீன் இயக்கத்தின் முக்கிய தீவிரவாதியான மன்சூர் அஹமட் லஸ்ஹர் தொபியா (LASHKAR TOBIA) வின் வழிகாட்டலின் கீழ் இயங்குகிறது. 90வீதமானவர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து வந்தவர்கள்.





பின்லாடனின் ஆப்கானிய முகாமில் பயிற்றுவிக்கப்பட்ட ஹர்கத்-அல்-முஜாஹிதீன் இயக்கத்தின் தலைவன் பசால் அல்-ரஹ்மான்.

## ஒய்வெடுக்கும் ஓடங்கள் -மன்னார்





ஐக்கியநாடுகள் சபை பொருளாதாரத் தடைவிதித்த பின் கைவிடப்பட்ட ஒரு கவசவாகனத்திலிருந்து ஒரு சிறுவன் ரொட்டி விற்பனை செய்கிறான்.



ஆப்கானில் கல்வி கற்க, தொழில் உரிமை மறுக்கப்பட்டு முகத்தை மூடி முழுநீள பர்தா அணிய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள பெண்கள்.



காஷ்மீர் தீவிரவாதிகளால் இந்தியன் எயார் லைன்ஸ் விமானம் கண்டஹர் விமான நிலையத்தில் (1999-12-30) தரித்து நிற்கிறது வாகனங்களில் தலிபான் அதிகாரிகளும், துப்பாக்கி ஏந்திய இராணுவத்தினரும்.



பக்தாத் வைத்தியசாலையில் தாய் ஒருவர் தன் குழந்தையுடன். ஈராக்கிற்கெதிரான பொருளாதாரத் தடையினால் 5 லட்சம் குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் வடமேற்கு எல்லைப் பிரதேசத்தில் ஹைபர் கணவாய் பகுதி. இதுவே பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் தற்போதைய யுத்த நிலையில் இது மேலதிக முக்கியத்துவம் பெறுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. சிறிதரன் 141A, மன்னார் ரோட், குருமன்காடு, வவுனியா அவர்களால் இரத்தினப்பிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது